www.tamilarangam.net

# இந்தியாவில் தொழிற்சங்க இயக்கம்



சி. பாஸ்கரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

இந்தியாவில் தொழிற்சங்க இயக்கத்தின் துவக்கம் முதல் சி.ஐ.டி.யு-யின் தோற்றம் வரையிலான வரலாறை எட்டிப்பார்க்கும் இந்தப் படைப்பு, இந்தியத் தொழிற்சங்க இயக்கத்தின் வரலாற்றுப் பாதையின் முக்கிய மைல்கற்கள் ஒவ்வொன்றை யும் தொட்டுத் தொட்டுச்செல்கிறது. தொழிற்சங்க இயக்க ஊழியர்களுக்கும், தொழிற்சங்க இயக்கத் தைப் பற்றி வகுப்பெடுக்கும் தோழர்களுக்கும் இந்த வெளியீடு மிகவும் பயனுடையதாக இருக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# இந்தியாவில் தொழிற்சங்க இயக்கம்.

சி. பாஸ்கரன்
(தமிழாக்கம். வி.கெ. பாலகிருஷ்ணன்.)

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

சவுத் விஷன்
சென்னை- 600 002.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Inthiyavil Thozhirsanga Iyakkam
C. Bhaskaran
Translated from Malayalam by V.K. Balakrishnan
First Published : September 2000

Published by

SOUTH VISION
6, Thayar Sahib II Lane
Chennai - 600 002.

Rs. 20.00

இந்தியாவில் தொழிற்சங்க இயக்கம்
சி. பாஸ்கரன்
தமிழாக்கம் : வி.கெ. பாலகிருஷ்ணன்
முதற் பதிப்பு : செப்டம்பர் 2000

வெளியீடு

சவுத் விஷன்
6, தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை - 600 002.

ரூபாய். 20.00

○ ஒளி அச்சு கோர்வை : விடியல், கோவை-15
○ அச்சாக்கம் : வைகை பிரிண்டர்ஸ், சென்னை - 2.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

இந்திய தொழிற்சங்க இயக்கத்தின் வரலாறு என்பது, இந்திய மக்களின் போராட்ட வரலாற்றின் சிறப்புமிக்கதொரு பகுதியாகும். 19ம் நூற்றாண்டில் துவங்கி இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற இந்திய தொழிலாளர்களின் கடந்தகால போராட்ட வரலாறு, இன்னமும் முழுமையாக எழுதப்படவில்லை. மிகவும் பயனுள்ள முறையிலான சில வெளியீடுகள் நாட்டின் பல பகுதிகளில் வெளிவந்துள்ளன. அவ்வாறு வெளியிடப்பட்ட ஒரு வரலாற்று நூல் தான் தற்போது உங்கள் கரங்களில் தவழுகிறது.

இந்த நூல், இந்திய தொழிற்சங்க இயக்கத்தின் மிகச்சுருக்கமான வரலாற்று குறிப்புகளைக்கொண்டது. தோழர்.சி.பாஸ்கரன் அவர்களால் இயற்றப்பட்டு, மலையாள மொழியில் வெளிவந்த நூல், எளிமையான தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் தொழில்கள், தொழிற்சாலைகள் வளர்ந்து வந்த பின்னணியை விளக்குவதிலிருந்து துவங்கி, 1970ல் சி.ஐ.டி.யு துவங்கப்படுவது வரையிலுமான காலத்தை இது உள்ளடக்கியுள்ளது.

ஆரம்ப கால தொழிலாளர் நிலை, தொழிலாளி வர்க்க இயக்கங்கள், போராட்டங்கள், முதல் அகில இந்திய அமைப்பான ஏ.ஐ.டி.யு.சி-யின் தோற்றம், அதில் ஏற்பட்ட பிளவுகள், இரண்டாவது உலகயுத்தத்தை யொட்டி ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, தொழிலாளர்களிடையே ஏற்பட்ட எழுச்சி என இந்திய தொழிற்சங்க இயக்க வரலாற்றின் உணர்ச்சி மிக்க பகுதிகளை, பொருளாதார பின்னணியோடு இணைத்து வழங்குகிறது இந்த நூல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

❖ சி.பாஸ்கரன்

நமது இளம் தலைமுறையினருக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த நூல் அமைந்துள்ளது. இந்திய தொழிற்சங்க இயக்கத்தின் வரலாற்றை அறிந்து கொள்வது, இன்றைய இயக்கங்களை வலுப்படுத்துவதற்கு மிகவும் அவசியமானது என்பதை யாரும் மறக்க முடியாது. அந்த நோக்கத்துடன் இந்த நூல் வெளியிடப்படுகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

தொழிலாளி வர்க்கத்தை ஒன்றுபடுத்தாமல், பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முடியாது என்ற தெளிவான பார்வையோடு 1920ல் ஏ.ஐ.டி.யு.சி துவக்கப்பட்டது. 50 ஆண்டுகளுக்கு பிறகு சி.ஐ.டி.யு துவக்கப்பட்ட போது வரவேற்புரையாற்றிய தோழர் ஜோதிபாசு, "புதிய ஒரு மத்திய அமைப்பை துவக்க வேண்டுமென்ற விருப்பத்தின் காரணமாக நாம் இதை மேற்கொள்ளவில்லை. மாறாக, தொழிலாளி வர்க்க ஒற்றுமையை வளர்த்தெடுக்க இப்படி ஓர் அமைப்பின் தேவை ஏற்பட்டுவிட்டது" என கூறினார்.

சி.ஐ.டி.யு செயல்பட்டுவரும் கடந்த 30ஆண்டுகளில் ஒன்றுபடுவோம் போராடி முன்னேறுவேம் என்பதே சி.ஐ.டி.யு-வின் போத விளக்கமாக அமைந்துள்ளது.

தாராளமய பொருளாதார கொள்கைகளின் தாக்குதல்களும் உழைப்பாளி மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் மதவாத -ஜாதிய முயற்சிகளும் புதிய சாவல்களாக எழுந்துள்ள நேரமிது. இந்த தாக்குதல்களுக்கு எதிராக போராட்ட ஒற்றுமையை வலுப்படுத்து வதே இன்றைய கடமையாகும்.

அன்றும், இன்றும், என்றும் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையே நமது முன்னேற்றத்திற்கு ஆதாரம்! ஒற்றுமையை வளர்த்தெடுக்கும் முயற்சிக்கு இந்த வரலாற்று நூல் காணிக்கையாக அமையட்டும்!

இதை மொழியாக்கம் செய்த தோழர்.வி.கே. பாலகிருஷ்ணன், வெளியிட ஏற்பாடு செய்த சவுத் விஷன் தோழர். பாலாஜி மற்றும் வெளியீட்டுக்கு பொறுப்பேற்று உதவி செய்த சி.ஐ.டி.யு.வின் ஈரோடு மாவட்ட குழுவிற்கும் சி.ஐ.டி.யு தமிழ் மாநிலக்குழுவின் சார்பில் வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.நல்லசிவன் நினைவகம்
13, மசூதி தெரு,
சேப்பாக்கம்,
சென்னை-5.

தோழமையுள்ள

(டி.கே. ரங்கராஜன்)

பொதுசெயலாளர்,
சிஐடியு, தமிழ் மாநிலக்குழு.

www.tamilarangam.net

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. தொழிலாளர் வர்க்கத்தின் தோற்றம் | 9 |
| 2. தொழிலாளிகள், போராட்டக் களத்தில் | 13 |
| 3. ஏ.ஐ.டி.யு.சி-யின் உருவாக்கமும் தொழிற்சங்க வளர்ச்சியும் | 19 |
| 4. தொழிற்சங்க இயக்கத்தில் பிளவு | 25 |
| 5. ஒற்றுமையை நோக்கி முன்னேற்றம் | 30 |
| 6. ஒற்றுமை புனரமைக்கப்படுகிறது | 36 |
| 7. இரண்டாம் உலகப்பெரும்போரின் போது தொழிற்சங்க இயக்கம் | 40 |
| 8. போருக்கு பிந்தைய முன்னேற்றம் | 45 |
| 9. புதிய அமைப்புகள் மீண்டும் | 50 |
| 10. வர்க்க சமரசத்திற்கு எதிரான போராட்டம் | 54 |
| 11. சி.ஐ.டி.யு உருவாகியது | 59 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1. தொழிலாளர் வர்க்கத்தின் தோற்றம்

இந்தியாவில் சற்று காலம் தாழ்ந்துதான் தொழிலாளி வர்க்கம் உருவாகியது. இங்கிருந்த காலனி அமைப்பில் முதலாளித்துவ வளர்ச்சிக்கு ஏற்பட்ட காலதாமதமும், அந்த வளர்ச்சி தடுக்கப் பட்டதும்தான் அதற்கு காரணம். 19-வது நூற்றாண்டின் இரண்டாம் பகுதி ஆனவுடன் நவீன ஆலைகளும் தோட்டங்களும், சுரங்கங்களும், தகவல் தொடர்பு சாதனங்களும் நடைமுறைக்கு வந்தவுடன் அந்த வர்க்கமும் உருவாகியது.

நூற்றாண்டுகளாக இந்தியாவில் இருந்து கொண்டிருந்த முழுமையான கிராமங்களின் அடிப்படையை பிரிட்டீஷ்காரர்கள் நொறுக்கிவிட்டனர். 1757-ல் நடைபெற்ற பிளாசி யுத்தத்தைத் தொடர்ந்து படையெடுத்து முன்னேறிய அவர்களுடைய ராணுவம் தாங்கள் கீழ்ப்படுத்திய பிரதேசங்களின் பொருளாதார அமைப்பை யும், பணிப் பங்கீட்டு முறையையும் சின்னாபின்னமாக்கி விட்டது. கீழ்ப்படுத்தப்பட்ட பிரதேசங்களின் செல்வம் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இந்திய நாட்டின் செல்வத்தை கொடூரமாகக் கொள்ளையடித்து தங்களுடைய நாட்டுக்கு அனுப்பி வைத்தனர். 1757-முதல் 1812-வரை 55 ஆண்டுகளுக்கிடையில் 10 கோடி பவுன் மதிப்புமிக்க செல்வத்தை அவர்கள் இந்தியாவிலிருந்து கடத்திச் சென்றிருக்கிறார்கள். இதிலிருந்தே அவர்கள் இங்கு மேற்கொண்ட கொள்ளையின் பரப்பையும் ஆழத்தையும் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு மூலதனத்தை கொள்ளையடித்து இங்கிலாந்துக்கு கடத்திச் சென்றால் மட்டும் போதாது, தொழிற் புரட்சியைத் தொடர்ந்து இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்றொழிப்பதற்கான சந்தையாகவும் இந்தியாவைப் பயன்படுத்த வேண்டும் என்று பிரிட்டீஷ் முதலாளிகள் முடிவுக்கு வந்தனர். எனவே கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இந்தியாவின் வணிக அரங்கில் இருந்த ஏகபோகத்தை பிரிட்டீஷ் முதலாளிகள் எதிர்த்தனர். அவர் களுடைய எதிர்ப்புக் குரலின் விளைவாக 1815-ல் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோகத்தை அகற்றிவிட்டனர். இந்தியச் சந்தையின் கதவுகள் பிரிட்டீஷ் முதலாளிகளுக்கு மலர்க்கத் திறந்து விடப்பட்டன. அதோடு இந்தியாவில் தொழில் மூலதனச் சுரண்டலின் ஒரு புதிய கட்டம் துவங்கியது. இந்திய முதலாளித்துவம் பிரிட்டனின் ஒரு புதிய இணைப்பாகவும், இந்தியா வெறும் விவசாய நாடாகவும் தாழ்ந்து விட்டது.

www.tamilarangam.net



இதற்கிடையே பிரிட்டீஷ்காரர்கள் விவசாயத் துறையிலும் மாறுதலை ஏற்படுத்தினர். ஜமீன்தாரி முறையும், ரயத்வாரி முறையும் அமுலுக்கு வந்தன. புதிய வகை நிலப் பிரபுக்கள் தலை தூக்கினர். லட்சக்கணக்கான விவசாயிகள் தங்களுடைய நிலத்தை இழந்தனர். இவ்வாறு நிலத்தைப் பறிகொடுத்தவர்கள் ஆதரவற்றவர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதோடு நிர்மாண- கைவினைத் தொழில் நொறுங்கிவிட்டது. அவைகளில் பணியாற்றிய பல்லாயிரக் கணக்கான கைத்தொழில் புரியும் தொழிலாளிகள், உற்பத்திக் கருவிகளில் இருந்தும் அன்னியப்படுத்தப்பட்டனர். விவசாயத் துறையும் அழிவைச் சந்தித்தது. நாடு முழுவதும் பஞ்சம் பரவிப் படர்ந்தது. 1825-க்கும் 1900-க்கும் மத்தியில் இரண்டு கோடிப்பேர் பஞ்சத்தில் மடிந்துபோயினர். லட்சக் கணக்கான மக்கள் தோட்டங்கள் போன்றவற்றில் பணியாற்றுவதற்காக தொலைதூர பிரிட்டீஷ் காலனி நாடுகளில் குடியேறும் கட்டாயத்திற்குள்ளாயினர். மேலும் பத்து லட்சக்கணக்கான மக்கள் பட்டணங்களையும், புதிதாக எழும்பிய தொழில் மையங்களையும் நோக்கி விரையத் துவங்கினர்.

1913-வரை இந்தியாவின் சில்க், மஸ்லின், துணி வகைகளையும் மற்றும் சுகபோகப் பொருட்கள் போன்றவற்றையும் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்து, கிழக்கிந்தியக் கம்பெனி லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த ஆண்டு கம்பெனியின் ஏகபோக உரிமை பறிக்கப்பட்டுவிட்டதால், பிரிட்டீஷ் தொழிலுற்பத்திப் பொருட்கள் வெள்ளப் பெருக்குபோல் இந்தியாவுக்குள் வந்து குவிந்தன. இந்தியாவில் இறக்குமதியாகும் இத்தகைய பொருட்களை துறைமுகங்களில் இருந்து நாட்டின் உட்பகுதிகளுக்குக் கொண்டு செல்லவும், தங்களுக்கு எதிராகத் திரும்பும் வாய்ப்புடைய மக்களை அடக்கி ஒடுக்க ராணுவத்தை அனுப்பி வைக்கவும் வசதியாக ரெயில் போக்குவரத்தைத் துவக்கும் கட்டாயத்திற்கும் பிரிட்டீஷ்காரர்கள் உள்ளாயினர். இவ்வாறு வணிகத் தேவைக்காகத் துவக்கப்பட்ட ரயில்வேயுடன் தொடர்புடைய ஏனைய தொழில்களையும் துவங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்டது. இந்த ரெயில்வே துவக்கப்பட்ட காலகட்டத்தில்தான் சமகால இந்தியத் தொழிலாளி வர்க்கம் கருக்கொண்டது. அதன் சிறப்புத் தன்மையை காரல் மார்க்ஸ் சுட்டிக் காட்டியிருந்தார்.

ரெயில் போக்குவரத்துக்கு நிலக்கரி இன்றியமையாததல்லவா? எனவே ரெயில்வே நிர்மாணிப்புடன் நிலக்கரித் தொழிலும் வளர்ந்து வந்தது. 1770-ல் தான் இந்தியாவில் முதன் முதலாக நிலக்கரி கண்டு பிடிக்கப்பட்டு பயன்படுத்தத் துவங்கினார்கள். சம்தால் நிலக்கரிச் சுரங்கம் 1845-ல் நிறுவப்பட்டது. 1895-முதல் ஜாரியா சுரங்கங்களில்

www.tamilarangam.net



இருந்து நிலக்கரி தோண்டும் பணி துவங்கியது.

ரெயில் போக்குவரத்தும் கப்பல் போக்குவரத்தும் வளர்ச்சியடைந்த பிறகு தொழிலுற்பத்திப் பொருட்களின் இறக்குமதியும் கச்சாப்பொருட்களின் ஏற்றுமதியும் பெருகின. இதனால் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்களின் எண்ணிக்கையும் அதிகமாகியது. இதோடு கூடவே இன்னொன்றும் நிகழ்ந்தது. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை ஒரு கட்டம் வரை பதப்படுத்தி அனுப்ப வேண்டும். அதற்கான ரைஸ்மில், பேக்கிங் தொழில், பருத்தி கடைசல் நிறுவனங்கள் போன்றவைகள் அமைக்கப்பட்டன. நிலக்கரித் தொழிலும் இந்த இணைத் தொழில்களும் சேர்ந்தபோது தொழிலாளிகளின் எண்ணிக்கையும் பெருகின. தோட்டத் தொழிலும் வளர்ச்சியடைந்த பிறகு சொல்லவே தேவையில்லை! 1839-ல் அசாமில் முதன் முதலாக தேயிலைத் தோட்டங்கள் துவக்கப்பட்டன.

இதே காலகட்டத்தில் சணல் தொழிலும் வளரத்துவங்கியது. 1775-ல் கிழக்கிந்தியக் கம்பெனி சணலின் பயனைப் புரிந்து கொண்டது. 1835-ல் இங்கிலாந்தில் இதை முதன் முதலாகப் பதப்படுத்திப் பார்த்தனர். பிறகு 19 ஆண்டுகளுக்குப் பிறகு கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலையை நிறுவினார்கள். 1886-ஆவதற்குள் இந்தியாவில் சணல் ஆலைகளின் ஒரு குழுவே உருவாயிற்று.

இந்திய முதலாளித்துவ வளர்ச்சியின் வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று, இந்திய முதலாளித்துவம் துணிமில்களைத் துவங்கியதாகும். உண்மையில் இந்திய நாட்டின் முதலாவது நவீனத் தொழிலே துணி நெய்யும் நெசவாலைகள்தான். 1818-ல்தான் முதலாவது துணிமில் இந்தியாவில் நிறுவப்பட்டது. கல்கத்தாவுக்கு அருகில் பட்டரியாவில் அது துவக்கப்படினும், இந்த தொழில் பம்பாயில்தான் மையம் கொள்ளத் துவங்கியது. 1854-ல் பம்பாயில் முதலாவது துணிமில் துவங்கப்பட்டது. 1880-ஆவதற்குள் அங்கு 85 மில்கள் நிறுவப்பட்டன.

இவ்வாறு சணல்-துணி நெசவாலைகள் வளரத்துவங்கியதும் தொழிலாளிகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவு உயர்ந்தது.

இந்திய வணிக- தொழில் துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டவுடன் பிரிட்டனில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்தும், இங்கிருந்து பிரிட்டனுக்கு பொருட்களையும் மூலப் பொருட்களையும் ஏற்றுமதி செய்தும் 'கமிஷன்' பெற்று வாழும் ஒரு தரகு முதலாளித்துவம் உருவாயிற்று. கூடவே ஆங்கில நிறுவனங்களிலும் ஜமீன்தாரிகளிலும் வேலை வாய்ப்புப் பெற்ற குமாஸ்தாக்களின் ஒரு பகுதியும் உருவாயிற்று. இவர்கள் தங்களுடைய சொத்தில் ஒரு பகுதியை

www.tamilarangam.net



தொழில்களில் முதலிடு செய்தனர். இவர்கள்தான் இந்திய முதலாளித் துவத்திற்கு 'பிறவி' அளித்தவர்கள். இவர்களும் தரகு முதலாளிகளும் தொழில்களில் முதலீடு செய்யத் துவங்கியபோது தொழிலாளிகளின் எண்ணிக்கை மீண்டும் பெருகியது.

1805-ல் வங்காளப் பிரிவினையைத் தொடர்ந்து 'சுதேசி'ப் போராட்டம் துவங்கியது. அன்னிய நாட்டுத் துணிகளையும், ஏனைய அன்னிய நாட்டுப் பொருட்களையும் புறக்கணிக்கும் இந்த போராட்டம் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது. அதன் விளைவாக 1914-ல் முதல் உலகப்பெரும்போர் துவங்குவதற்குள் 9, 50, 973 தொழிலாளிகள் பணியாற்றும் 2936 தொழிற்சாலைகள் இங்கு உருவாயின. இந்தக் கட்டத்தில் தேசிய முதலாளிகளுக்கு ஏற்பட்ட வளர்ச்சி சிரத்தைக் குரியதாகும். தொழில்- வங்கி- இன்ஷ்யூரன்ஸ் துறைகளில் இந்திய முதலாளித்துவம் இந்தக் காலகட்டத்தில்தான் நுழைந்தது. டாட்டா எஃகுத் தொழிற்சாலை 1908-ல்தான் துவங்கப் பட்டது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்

போர்க்காலத்தில் சில தொழில்கள், குறிப்பாக போருடன் தொடர்பானவை, மிக வேகமாக வளர்ச்சியடைந்தன. பத்தும் அதற்கு மேற்பட்டும் கூடுதலான தொழிலாளிகள் பணியாற்றும் நிறுவனங் களில் அனைத்தும் ஒட்டு மொத்தமாக 26 லட்சம் தொழிலாளிகள் இருப்பதாக 1921-ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரிய வந்தது. உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் கட்டத்தில் இந்த நிகழ்வு மங்கவோ அல்லது எதிர்விளைவுக்கு ஆட்படவோ செய்தன. எனவே இரண்டாம் உலகப்பெரும் போரின் துவக்கத்தில் நவீன பெரும் தொழில்களில் பணியாற்றும் தொழிலாளிகளின் எண்ணிக்கை 35 லட்சத்திற்கு மேற்பட்டதாக இருக்கவில்லை.

❖❖❖

www.tamilarangam.net

## 2. தொழிலாளிகள் போராட்டக்களத்தில்

இந்தியத் தொழிலாளி வர்க்கம் அதன் துவக்கக்கட்டத்தில் சொல்லொணாக் கஷ்டங்களும் துன்பங்களும் சகித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் மீது கடுமையான சுரண்டல் திணிக்கப் பட்டது. குறைந்த ஊதியம், நெடிய பணி நேரம், குழந்தைகளிடம் வேலை வாங்குவது- ஆகியவைதான் இந்தச் சுரண்டல்களில் குறிப்பிடத்தக்கவை. தொழிலாளிகளுக்கு பாதுகாப்பு அளிப்பது போன்ற விஷயங்களில் எந்த விதமான சட்டமும் கிடையாது. அதுமட்டுமின்றி இயந்திரங்களில் பணியாற்றிக் கொண்டிருப்பவர் களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. அதன் விளைவாக விபத்துக்கள் நிகழ்வதும் அதனால் தொழிலாளிகளுக்கு அங்கச் சிதைவுகள் ஏற்படுவதும் வழக்கமாக இருந்தன. அங்கச் சேதமேற்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு அளிப்பதும் கிடையாது.

துவக்கக் காலங்களில் தொழிலாளிகளை மிருகத்தனமாகச் சுரண்டும் முறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள, சில அதிகார ஆவணங்களையும் நீதிமன்றங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட சில அறிக்கைகளையும் சில செய்திகளையும் புரட்டிப் பார்த்தால் போதும். உதாரணத்திற்கு, அமலில் இருக்கும் தொழிற்சாலைச் சட்டத்தில் மாறுதல்களைச் செய்ய 1908-ல் நியமனம் செய்யப்பட்ட இந்தியன் ஃபேக்டரி லேபர் கமிஷனின் அறிக்கையையே பார்க்கலாம். அதில் அகமதாபாத்தில் சராசரி வேலை நேரம் நாளொன்றுக்கு 12-மணி நேரம் என்று குறிப்பிட்டிருக்கிறது. மின் சக்தியைப் பயன்படுத்தி இயங்கிக் கொண்டிருந்த 60- மில்களில் தொழிலாளிகள் தினசரி 13-முதல் 15 மணி நேரம் பணியாற்ற வேண்டியிருந்தது. பிரோச்சிலும், டில்லியிலும் 13½ முதல் 14½ மணி நேரமும், ஆக்ராவில் 13¾ முதல் 15¾ மணி நேரமும், அமிர்தசரஸ், லாகூர் போன்ற இடங்களில் 13 மணி 40 நிமிட நேரமும் தினசரி வேலை நேரங்களாக இருந்தன. கல்கத்தா சணல் ஆலை முதலாளிகள் 15 மணி நேரமும் அதற்கு மேலும் தொழிலாளிகளை உழைக்க வைத்து சாதனை புரிந்தனர்.

இவ்வாறு தொழிலாளிகள் நெடு நேரம் பணியாற்ற நேரிடினும் அவர்களுக்குக் கிடைத்த கூலி பரிதாபத்திற்குரிய அளவில் குறைவாக இருந்தது. வங்கத்தின் சணல் ஆலைகளில் சாதாரணமான பணியைச் செய்யும் ஒரு சிறுவனுக்கு பாதிநாள் உழைப்புக்காகக் கிடைத்த வாரக்கூலி ஒரு ரூபாய் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! திறமையான மெக்கானிக் வாரக்கூலியாக 10ரூபாயும், திறமையற்ற

www.tamilarangam.net



தொழிலாளிகள் வாரக்கூலியாக 14-அணா 6-பைசாவில் இருந்து 3ரூபாய் வரையும்தான் சணல் ஆலைகளில் ஊதியம் பெற்றதாக 'பிரிட்டீஷ் இந்தியா அசோசியேஷன்' ஒரு அறிக்கையில் கூறியது. 1892-ல் கல்கத்தா பஞ்சாலைகளில் சராசரி ஊதியம் 6ரூபாய்தான். 'மீரத் சதி வழக்கில்' குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதி மன்றத்தில் சமர்ப்பித்த ஒரு அறிக்கையில் அந்தக் காலத்தொழிலாளிகள் பெற்ற கூலியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைப் பாருங்கள்... கடுமையான குளிர்காலச் சூழலில் தினசரி 10 மணி நேரம் பணியாற்றும் ஆங்கிலத் தொழிலாளி 25-ஷில்லிங் (13-ரூபாய்) வாரக்கூலி பெறுகிறான். அதே பொழுது 24 மணி நேரம் உழைக்கும் இந்தியத் தொழிலாளி பெறும் வாரக்கூலி 4 ஷில்லிங் (9-ரூபாய்) மட்டும்தான்! 1890-ஆம் ஆண்டு கூலி நிலைமை இது!

இவ்வாறு கூடுதல் நேரம் குறைந்த கூலிக்கு பணியாற்றும் கட்டாயத்திற்குள்ளான தொழிலாளிகளின் குடியிருப்பு வசதி மிகமிகப் பரிதாபத்திற்குரியதாகும். வேலைதேடி தொழிற்சாலை மையங்களை வந்தடையும் தொழிலாளிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தி னருக்கும் சொந்தமாகப் பயன்படுத்த ஒரு அறைகூடக் கிடைப்ப தில்லை. காற்றோட்டமும் சுகாதார வசதிகளும் இல்லாத ஒரு அறையில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் நெருக்கியடித்துக் கொண்டு வாழவேண்டியிருந்தன. பம்பாய் நகரத்தில் காற்றோட்ட மில்லாத குறுகிய தனித்தனி அறைகளைக் கொண்ட ஒவ்வொரு குடியிருப்புகளிலும் 'நான்கரை ஆட்கள்' வீதம் வசிப்பதாகவும், அவ்வாறு வசிப்பவர்களின் எண்ணிக்கை நகரவாசிகளில் 69 சதவித மென்றும் 1911-ல் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. 1931-ல் அவர்களுடைய விகிதாச்சாரம் 74 சதவிகிதமாக உயர்ந்துவிட்டது. கல்கத்தா, ஹௌரா, கான்பூர், சென்னை போன்ற இந்தியாவின் எல்லா தொழில் நகரங்களுக்கும் இது பொருந்தும்.

தொழிலாளிகளை மிருகத்தனமாகச் சுரண்டும் முதலாளிகள் கொள்ளை லாபம் பெற்றனர். அதன் ஆழத்தைப் புரிந்துகொள்ள உதவும் ஒரு கணக்கு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. 1927-ல் தங்களுடைய தங்கவிழாக் கொண்டாட்டத்தின்போது நாக்பூரில் இருக்கும் டாடாவின் 'எம்ப்ரஸ் மில்' வெளியிட்ட அறிக்கையில் அதன் முதலாளி கூறினார்: "1926 ஜுன் 30 வரை எம்ப்ரஸ் மில் 92314527-ரூபாய்க்கு மேல் மொத்த லாபம் ஈட்டியது. இது சாதாரண பங்கு மூலதனத்தின் 6147 இருமடங்காகும். இந்தத் தேதி வரை கம்பெனி சாதாரண பங்கின் மீது 59413267 ரூபாய் டிவிடெண்டாக அளித்திருக்கிறது." இது எம்ப்ரஸ் மில் நிலைமை மட்டுமல்ல ஏனைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மில்களின் நிலைமையும் இதிலிருந்து மாறுபட்டதில்லை.

தாங்கள் அனுபவிக்க நேர்ந்த துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் முன்னால் பிற நாடுகளின் தொழிலாளிகளைப் போலவே இந்தியத் தொழிலாளிகளும் உதவுவாரின்றி செயலற்று நிற்கவில்லை. அவர்கள் திருப்பித் தாக்கினார்கள்: தங்களைப் பிழிந்தெடுக்கும், நரக வாழ்க்கைக்குள் தள்ளிவிடும், ஆலை முதலாளிகளுக்கு எதிராகப் போராடினார்கள். படிப்படியாக ஏகாதிபத்திய ஒடுக்கு முறை ஆட்சிக்கு எதிராகவும் அவர்கள் களம் புகுந்தனர். இருப்பினும் நீண்ட காலம் வரை ஒரு நிலையான ஒரு 'சங்க' அமைப்பு உருவாகவில்லை. அதற்கு முன்னடவடிக்கை எடுப்பதற்கு போதுமான உணர்வு பெறும் நிலையை எட்ட அவர்கள் காலம் தாழ்ந்து விட்டனர் என்று பொருள். ஏனென்றால் அவர்கள் மிகவும் கல்வியறிவற்றவர்களாகவும் விவசாய மனப்பான்மை கொண்டவர்களாகவும் பின்தங்கியிருந்தார்கள் என்பதே காரணமாகும்.

இந்தியாவில் ஆலைத் தொழிலாளர்களின் முதல் வேலை நிறுத்தம் ரெயில்வேத் துறையில்தான் நடைபெற்றதாக கிடைத்த வரையிலான தகவல் விவரங்களின் அடிப்படையில் சுகோமல் சென் முடிவுக்கு வந்தார். 1862 ஏப்ரல்-மே மாத காலகட்டத்தில் ஹௌரா ரயில் நிலையத்தில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்றது. வேலை நேரம் 8மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. இந்தியாவில் ரெயில் போக்குவரத்து துவங்கிய 9 ஆண்டுகளுக்குள் இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்! வரலாறு படைத்த சிகாகோ தொழிலாளர்களின் மே தினப் போராட்டத்திற்கு 24 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது இந்த ரெயில்வேத் தொழிலாளிகளின் வேலை நிறுத்தம் என்பதையும் மறக்கக்கூடாது. வர்க்க உணர்வுடன் ஒன்றுபட்ட போராட்டமாகவும் இந்த வேலை நிறுத்தம் நடை பெற்றதாக முடிவுக்கு வரவேண்டும். இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் மழலைப் பருவத்தில் நடைபெற்ற அந்த வேலை நிறுத்தம் காலகட்டத்தின் இயலாமைகள்- குறைபாடுகள்- மற்றும் பலவீனங்களைக் கொண்டதாக இருந்தது.

இந்த வேலை நிறுத்தத்திற்கு முந்தியும், வேலை செய்யாம லிருத்தல் நடைபெற்றிருக்கிறது. 1823-ல் பல்லக்கு தூக்கும் தொழிலாளர்களும் 1853-ல் படகோட்டிகளும் வேலை நிறுத்தம் செய்தனர். 1862-ல் கல்கத்தாவில் மாட்டு வண்டிக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அதே ஆண்டு ஹௌராவில் ரெயில்வே போர்ட்டர்கள் வேலைக்குச் செல்லவில்லை. அதைப் போலவே 1866-ல் பம்பாய் மாநகராட்சியில் இறைச்சி வியாபாரிகளும்

www.tamilarangam.net



பணிசெய்ய மறுத்தனர். 1873-ல் அகமதாபாத்தில் தையல் தொழிலாளிகளும் செங்கற் சூளைத் தொழிலாளர்களும் வேலைகளை முடக்கினர். இந்த வேலை நிறுத்தங்கள் எதுவும் 1862-ல் நடைபெற்ற ரெயில்வேத் தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தைப்போல் நவீன தொழிற் துறைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் போன்றவை அல்ல!

வேலை நிறுத்தங்கள் பின்னரும் தொடர்ந்தன. 1887-ல் கூலிப் பிரச்சனை தொடர்பாக நாக்பூர் எம்ப்ரஸ் மில் தொழிலாளிகள் பெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டனர். 1882-க்கும் 1900-க்கும் மத்தியில் பம்பாய் சென்னை மாநிலங்களில் 25-க்கும் குறையாத எண்ணிக்கையில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன. சின்னச் சின்ன வேலை நிறுத்தங்கள் இதைவிட எவ்வளவோ கூடுதலாக நடைபெற்றனவாம்.

இந்த வேலை நிறுத்தங்களால் பலன் கிடைக்காமலில்லை. ஒவ்வொன்றாக தொழில் சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்த அவை பிரிட்டீஷ் அரசின்மீது நிர்ப்பந்தத்தைச் செலுத்தின. போதாக்குறைக்கு இந்தியத் துணிமில் தொழில் மற்றும் அவற்றின் லாபவிகித வளர்ச்சியைக் கண்ணுற்ற லங்காஷயர் தொழிலாளர்கள், இந்தியத் தொழிலாளிகள் அதீதமாகச் சுரண்டப்படுவதைத் தடுக்க சட்டமியற்ற வேண்டும் என்று பிரிட்டீஷ் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இவ்வாறு தொழிலாளிகளின் போராட்டங்களினாலும், பிரிட்டீஷ் தொழிலாளிகளின் நெருக்குதல்களினாலும் இந்தியத் தொழிலாளிகளுக்கு 1881-ல் முதன் முதலாகத் தொழில் சட்டம் கிடைத்தது.

அதற்குப் பிறகு ஒவ்வொரு வேலை நிறுத்தத் தொடர்கள் முடியும்போதும் ஒவ்வொன்றாக புதுப்புது சட்டங்கள் இயற்றப் பட்டன. இவ்வாறு ஒவ்வொரு சட்டங்களாக உருவாக்கிக் கொண் டிருக்க படிப்படியாக வேலை நேரமும் சுருங்கியது. சிறுவர்களை வேலையில் அமர்த்துவது, பெண்களிடம் உழைப்பை வாங்குவது போன்றவைகளுக்கு கட்டுப்பாடுகள் வந்தன. கூலியிலும் மெல்ல மெல்ல உயர்வு ஏற்பட்டது. 1920-ல் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டங்களின் மூலம் வேலை நேரம் 10மணி நேரமாகக் குறைக்கப்பட்டன. 1930-34-ல் நடைபெற்ற போராட்டங்கள் அதை 9மணி நேரமாக மேலும் குறைத்தன. போருக்குப் பிந்திய முன்னேற்றங்கள் வேலை நேரத்தை 8மணி நேரமாகக் குறைத்து நிர்ணயிக்க 1946-ல் காங்கிரஸ் அரசுகளைத் தூண்டின.

1895-வரை இந்தியாவில் தொழிலாளிகளின் வர்க்க உணர்வு போதுமான அளவுக்கு விழிப்படையவில்லை. எனவே அவர்களாக ஒன்றுபடுவதற்காக குறிப்பிட்டு எதுவும் செய்யப்படவுமில்லை.

www.tamilarangam.net



இருப்பினும் தானாக வெடித்துக் கிளம்பிய வேலை நிறுத்தங்கள், சங்கம் எதுவும் இல்லாவிட்டாலும் தொழிலாளிகளின் சக்தி எத்தகையது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதற்கு உதவிகரமாக இருந்தன. மெல்ல மெல்ல தொழிலாளிகளின் சங்க அமைப்புகள் உருப்பெறத் துவங்கின. 1897-ல் "அமால் கமேடட் சொசைடி ஆஃப் இண்டியா அண்டு பர்மா" உருவாயிற்று. 1882-ஆம் ஆண்டு இந்தியன் கம்பெனிச் சட்டத்திற்கு ஏற்ப அது பதிவு செய்யப்பட்டது. ரெயில்வேயில் பணியாற்றும் ஐரோப்பிய- ஆங்கிலோ இந்தியத் தொழிலாளிகள்தான் இந்த அமைப்பில் பெருவாரியாக இருந்தனர். அதற்கு ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் குணாம்சம்தான் இருந்தது.

1897–லேயே "அமால்கமேடட் சொசைடி ஆஃப் ரெயில்வே சர்வென்ட்ஸ்" அமைப்பும் உருவாக்கப்பட்டது.

இந்த நூற்றாண்டு துவக்கமானவுடன் இந்திய தேசிய காங்கிரஸின் தலைமையில் தேசிய இயக்கம் பலம் பெற்றது. அது தொழிலாளி இயக்கத்தில் அதற்குரிய செல்வாக்கை செலுத்தியது. தொழிலாளி இயக்கம் தேசிய இயக்கத்திலிருந்து ஆவேசம் பெற்று முன்னேறியது. தொழிலாளி இயக்கத்தின் தொடர்ந்த வளர்ச்சி தேசிய இயக்கத்துடன் பின்னிப் பிணைந்து கொண்டிருந்தது.

1905-ல் வங்காளப் பிரிவினை மக்கள் முன்னேற்றத்தை உருவாக்கியது. சுதேசி இயக்கமும் அன்னியப் பொருள் புறக்கணிப்பும் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மனோநிலையைப் பிரதிபலித்தது. இந்த தேசிய முன்னேற்றத்திற்கு தொழிலாளிகளை ஈர்க்க வங்கத்து தேசியவாதிகள் ஆலைத் தொழிலாளிகளின் பொருளாதார சமூகத் தேவைகளுக்கு ஆதரவளித்தனர். தொழிலாளி களின் பங்கேற்பு தேசிய இயக்கத்திற்கு மேலும் வலுவூட்டியது.

இந்தக் கட்டத்தில் ஏராளமான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. கல்கத்தாவில் இந்திய அரசு அச்சகத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தம்தான் அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அது சிறப்புக் கவனத்தை ஈர்த்தது. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இந்த அச்சுத் தொழிலாளிகளின் வேலை நிறுத்தப் போராட்டம் 1905-செப்டம்பர் 27-ஆம் தேதியன்று துவங்கி ஒரு மாதக்காலம் நீடித்து நடைபெற்றது. கெஜட்டை அச்சடிக்க அவர்கள் மறுத்தனர். ஞாயிற்றுக் கிழமையும் கெஜட் விடுமுறை நாட்களிலும் விடுமுறை யளிக்க மறுப்பதற்கும் கண்மூடித்தனமாக அபராதம் விதிப்பதற்கும் எதிராகத்தான் வேலை நிறுத்தம் செய்தனர். இந்த வேலை நிறுத்தம் முடிவதற்குள் கல்கத்தாவிலே இருக்கும் ஸ்பிங்க் அண்டு கம்பெனியைச் சார்ந்த அச்சகத் தொழிலாளிகளும் வேலை நிறுத்தம் செய்தனர். 1905-ல் கல்கத்தாவில் உருக்கொண்ட அச்சுத் தொழிலாளர்

www.tamilarangam.net



சங்கம் (பிரிண்டர்ஸ் யூனியன்) தான் அதற்கு தலைமையேற்றது. கல்கத்தாவில் இருக்கும் ஏனைய அச்சகத் தொழிலாளிகளும் அதற்கு தீவிர ஆதரவளித்தனர். கல்கத்தாவில் சில சணல்ஆலைகளிலும் போராட்டம் வெடித்துக் கிளம்பியது.

வேலை நேரம் உயர்த்துவதற்கும், பரிதாபத்திற்குரிய வாழ்க்கை நிலைக்கும் எதிராக 1905-க்கும் 1909-க்கும் இடையில் கல்கத்தா மில்களிலும் கிழக்கு வங்க ரெயில்வேயிலும் வேறு பல இடங்களிலும் வேலை நிறுத்தங்கள் வெடித்துக் கிளம்பின. இந்த வேலை நிறுத்தங்களில் மிக முக்கியமானது, தேசியத் தலைவர் பாலகங்காதர திலகரைக் கைது செய்து தண்டிக்கப்பட்டதை எதிர்த்து கண்டனம் தெரிவிக்க பம்பாய் தொழிலாளிகள் மேற்கொண்ட வேலை நிறுத்தமாகும். இந்தியத் தொழிலாளிகள் மேற்கொண்ட முதல் அரசியல் வேலை நிறுத்தமும் இதுதான். 1908-ஜூலை 23-ஆம் நாள் நடைபெற்ற இந்த வேலை நிறுத்தத்தில் ஒரு லட்சம் தொழிலாளிகள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த நாள் முதல் மக்கள் ஆயுதம் தாங்கிய போலீசையும் ராணுவத்தையும் எதிர்க்கொள்ளும் துணிச்சலை வெளிப்படுத்தினர். இந்த வேலை நிறுத்தத்தின் முக்கியத்துவத்தை பழைய சோவியத் யூனியனில் இருந்தவாறு தோழர் லெனின் புரிந்து கொண்டார். வேலை நிறுத்தம் மேற்கொண்ட தொழிலாளிகளைப் பாராட்டிய லெனின் "இந்தியத் தொழிலாளிகள் பக்குவம் பெற்றுவிட்டனர்," என்று கருத்து வெளியிட்டார்.

❖❖❖

www.tamilarangam.net

## 3. ஏ.ஐ.டி.யு.சி-யின் உருவாக்கமும் தொழிற்சங்க வளர்ச்சியும்.

முதல் உலகப்போர் துவங்கியதும் இந்தியாவில் முதலாளித்துவ வளர்ச்சி கூடுதலாக ஆக்கம் பெற்றது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் அதோடு தொழிலாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தன. போர்க்காலத்தில் போதிய அளவுக்கு ஒருங்கிணையாவிட்டாலும் பல்வேறு தொழில் மையங்களிலும் தொழிலாளிகளின் வேலை நிறுத்தங்கள் வெடித்துக்கிளம்பின. போர் முடிவுறும் தருவாயில் வேலை நிறுத்தங்கள் மேலும் பலம்பெற்று பரவலாகியது. கல்கத்தா, பம்பாய் சென்னை, ஷோலாப்பூர், அகமதாபாத் போன்ற பெரும்பாலான முக்கியத் தொழில் நகரங்கள் சக்தி வாய்ந்த வேலை நிறுத்த மையங்களாக மாறின. 1919- ஜனவரி துவக்கத்தில் ஒன்றேகால் லட்சம் தொழிலாளிகள் கலந்து கொண்ட 200 வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன.

வேலை நிறுத்தங்களின் வாயிலாக தொழிலாளிகளுக்கு கூலி உயர்வு, வேலை நேரத்தில் குறைவு போன்ற சலுகைகளை வென்றெடுக்க முடிந்தது. 1920-ல் பம்பாயில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களைக் குறிப்பிட்டு 'இந்தியா 1920-ல்' என்ற வெளியீடு பின்வரும் தகவலைத் தந்தது: "1970-இல் நடைபெற்ற இந்த வேலை நிறுத்தங்களைத் தொடர்ந்து தொழிலாளிகளின் கூலியில் 10 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதம் வரை உயர்வேற்பட்டது"

இந்த தொழிலாளர் வேலை நிறுத்தங்களின் பலனாக தொழிற்சங்க அமைப்புகள் வளர்ச்சியடைந்தன. இதில் பெரும்பாலான சங்கங்கள் வேலை நிறுத்தக் கமிட்டிகளின் உருவில்தான் துவக்கப்பட்டன. பின்னர் அவற்றை நல்ல முறையில் இயங்கும் தொழிற்சங்கங்களாக மாற்றப்பட்டன.

தொழிலாளிகளின் போராட்டங்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியை வெகுவாக ஊக்குவித்த ஒரு சர்வதேச நிகழ்ச்சியைப் பற்றி இங்கு கூறியாக வேண்டும். வரலாற்றுப் போக்கையே மாற்றிப் புரட்டிவிட்ட அக்டோபர் புரட்சிதான் அது. சோவியத் யூனியனில் தொழிலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிய நிகழ்ச்சி நமது நாட்டுத் தொழிலாளிவர்க்க இயக்கங்களுக்கு பெருமளவு ஊக்கமும் தன்னம்பிக்கையும் அளித்தது.

தொழிற்சங்கங்களின் வளர்ச்சியும் இந்தியா முழுக்க நடைபெற்ற

www.tamilarangam.net



தொழிலாளிகளின் போராட்டங்களும், தொழிற்சங்கப் போராட்டங்களை அகில இந்திய அளவில் இணைப்பதற்கான வாய்ப்பையும் தேவையையும் உயர்த்தின. இதைத் தவிர அப்போது உருவான ஐ.எல்.ஒ.மாநாட்டுக்கு இந்தியாவில் இருந்து ஒரு தொழிலாளர் பிரதிநிதிக் குழுவை அனுப்பி வைக்க வேண்டிய தேவையும் எழுந்தது. இந்தப் பின்னணியில்தான் 1920-ஜூலை 16-ஆம் நாள் தொழிற்சங்க அரங்கில் பணியாற்றுபவர்கள் பம்பாயில் ஒன்றுகூடி அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (ஆல் இண்டியா டிரேட் யூனியன் காங்கிரஸ்) ஏ.ஐ.டி.யு.சி-யை உருவாக்க முடிவு செய்தனர். அந்தக் கூட்டத்தில் இன்னொரு தீர்மானத்தையும் நிறைவேற்றினார்கள். ஏ.ஐ.டி.யு.சி-யின் நிறுவன மாநாட்டை பம்பாயில் நடத்த வேண்டும்.

அந்த முடிவுக்கேற்ப ஏ.ஐ.டி.யு.சி-யின் மாநாடு 1920 அக்டோபர் 31-ஆம் நாள் பம்பாய் நகரில் எம்பயர் தியேட்டரில் துவங்கியது. 801 பிரதிநிதிகள் பங்கேற்ற அந்த மாநாட்டிற்கு லாலா லஜபதி ராய் தலைமை தாங்கினார். மோதிலால் நேரு, ஜின்னா, திருமதி ஆன்னிபெசண்ட், விடல்பாய் படேல் போன்ற வெவ்வேறு அரசியல் கொள்கை மாற்றுக் கருத்துடைய தலைவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் ஏ.ஐ.டி.யு.சி-யுடன் இணைக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை 140854-ஆகும். இதைத் தவிர 42- தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்து ஒத்துழைப்பளிப்பதாகவும் வாக்களித்தன. லஜபதி ராயின் தலைமை உரையும் மாநாடு நிறைவேற்றிய தீர்மானங்களும் மூன்று விஷயங்களை அழுத்தமாகக் கூறியது:

1) தொழிலாளிகள் ஒரு வர்க்கமென்ற அடிப்படையில் ஒன்று பட வேண்டும்.

2) இந்தியத் தொழிலாளிகள் இந்தியாவுக்கு வெளியேயுள்ள தொழிலாளிகளுடன், குறிப்பாக வெற்றிகரமாக சோஷலிசப் புரட்சியை நடத்தி முடித்த ரஷ்யத் தொழிலாளிகளுடன் ஐக்கியத்தைக் கட்டிக் காக்க வேண்டும்.

3) விடுதலைக்கான போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். இவை மூன்றும் இந்தியத் தொழிலாளிவர்க்கத்தின் கொடிஅடையாளமாகி விட்டன.

போலீஸ் தலையீட்டிலிருந்து பாதுகாப்பளிக்கப்பட வேண்டும். வேலையில்லாதவர்களின் பதிவேட்டைப் பாதுகாக்க வேண்டும். உணவுப் பொருட்கள் ஏற்றுமதியைத்தடை செய்ய வேண்டும். விபத்துக்களுக்கு நஷ்ட ஈடளிக்க வேண்டும். பிரிவிலேஜ் லீவ், சிக் லீவ் போன்றவைகளை அனுமதிக்க வேண்டும். இதுபோன்ற

www.tamilarangam.net



கோரிக்கைகளடங்கிய தீர்மானங்களை மாநாடு நிறைவேற்றியது. இந்தியாவில் கம்யூனிஸ்டு குழுக்கள் உருவாவதற்கு முன்தான் இந்த மாநாடு நடைபெற்றது என்பதும், இந்தக் கோரிக்கைகள் எழுப்பப் பட்டன என்பதும் கருத்திற்கொள்ள வேண்டும்.

ஏ.ஐ.டி.யு.சி- உருவாகி விரைவிலேயே காந்திஜியின் தலைமையில் ஒத்துழையாமை இயக்கம் பலம் பெற்றது. அந்த இயக்கத்தின் அலைவீச்சுக்களுக்கிடையே பல்வேறு இடங்களில் தொழிலாளிகளின் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. அந்த வேலை நிறுத்தங்கள் பெரும்பாலும் பொருளாதாரத் தேவைகளை வென்றெடுப்பதற்காக நடைபெறவில்லை. 1921-ல் திலகரின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் பம்பாயில் 80 000 தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர். வெயில்ஸ் இளவரசரின் இந்திய வருகையைக் கண்டித்து நவம்பர் 17-ஆம் நாள் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்திலும் அவர்கள் பங்கேற்றனர். அந்த ஆண்டு மொத்தம் 396 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றதாகக் கணக்கிடப் பட்டது. அந்த வேலை நிறுத்தங்களில் கலந்து கொண்ட தொழிலாளி களின் எண்ணிக்கை 600351-ஆகும். வேலை நிறுத்தத்தின் விளைவாக 6994426 வேலை நாட்களின் இழப்பேற்பட்டன. தொழிலாளி இயக்கம் தேசிய இயக்கத்துடன் இணைந்து முன்னேறத் துவங்கியது. ஆனால் 1922-27 காலகட்டத்தில் இந்த முன்னேற்றம் மந்தப்போக்கை அடைந்தது.

சௌரி சௌரா நிகழ்ச்சியைத் தொடர்ந்து காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப்பெற்ற போது நாட்டு மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பெரிதும் ஏமாற்றத்திற்குள்ளாயினர். அவர்கள் நாட்டின் விடுதலைக்காக வேறு வழிகளைத் தேடத்துவங்கினார்கள். அவர்களில் ஒரு பகுதியை துடிப்புமிக்க தேசிய இயக்கம் ஈர்த்தது. இன்னொரு பகுதியை சோஷலிச கம்யூனிசக் கருத்துகள் ஈர்த்தன. நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்றி பிறகு 1925-ல் இந்த மண்ணில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி என்ற நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளிகளை ஒன்றுதிரட்டும் செயலில் மூழ்கியபோது தொழிலாளி இயக்கம் மேலும் வலுப்பெற்றது. கட்சி தொழிலாளிகளுக்கிடையில் விஞ்ஞான சோஷலிசத்தைப் பிரச்சாரம் செய்தது.

ஏ.ஐ.டி.யு.சி உருவாவதற்கு முன் சமூக சீர்திருத்தவாதிகள் மற்றும் தேசியவாதிகளான லிபரல் சிந்தனையாளர்கள் பலபேர் வெளியில் இருந்து வந்து தொழிலாளிகளின் மத்தியில் பணியாற்றினார்கள். அவர்களுக்கிடையில் இரண்டு லட்சியங்கள் இருந்தன. ஒன்று,

www.tamilarangam.net



விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளிகளை அணிதிரட்டுவது. இன்னொன்று, சொந்தத் தேவைகள், உரிமைகள் போன்றவற்றை வென்றெடுக்கும் போராட்டத்தின் பாதைக்கு தொழிலாளிகளை வழிநடத்திச் செல்வது. இந்த முதலாளித்துவ-குட்டி முதலாளித்துவ தேசியவாதிகள் ஒடுக்கப்பட்டவர்களும் சுரண்டப்படுவர்களுமான தொழிலாளிகளிடம் பரிவாகவும் அனுதாபமாகவும் இருந்தனர். அடிக்கடி அவர்களுடைய போராட்டங்களுக்கும் தலைமையேற்றனர். இருப்பினும் வீறுகொண்ட வர்க்கப் போராட்டத்தை அவர்கள் எதிர்த்தனர். அவர்களில் ஒருவர்தான் மகாத்மா காந்தி. அகமதாபாத் துணிமில் தொழிலாளிகளை ஒன்று திரட்டி அவர்களுடைய போராட்டங்களுக்கு தலைமையேற்ற அவர், தொழிலாளிகள் வர்க்க ரீதியில் திரண்டு அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு எதிராக இருந்தார். வர்க்கப் போராட்டக் கோட்பாட்டை எதிர்த்து, ‘டிரஸ்டிஷிப்’ கோட்பாட்டை முன்வைத்தார். இந்த நூற்றாண்டின் இருபதுகளிலிருந்து இந்தியத் தொழிற்சங்க இயக்கத்திற்குள் ஒரு வகையில் இல்லாவிட்டால் இன்னொரு வகையில் முதலாளித்துவக் கருத்துக்கும் மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டுக்குமிடையே போராட்டம் நடைபெற்றுக் கொண்டுதானிருந்தது. மார்ச்சிய-லெனினியத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் தொழிற்சங்க இயக்கத்தில் தீவிரமாகச் செயல்படத் துவங்கியதும் தொழிலாளர் போராட்டங்கள் பலம்பெற்று முன்னேறின.

1926-27 காலகட்டத்தில் தொழிலாளி-விவசாயிக் கட்சிகள் உருவாயின. அதோடு தொழிலாளர் இயக்கத்திற்குள் வீறுகொண்ட பகுதிகளை காங்கிரசின் இடதுசாரி அணியுடன் இணைக்கும் முயற்சி நடைபெற்றது. தொழிலாளி-விவசாயிக் கட்சிகளை உருவாக்க வங்கம் தலைமையேற்றது. தொடர்ந்து பம்பாய் பஞ்சாப், உத்திரப்பிரதேசம் போன்ற இடங்களில் அந்தக் கட்சிகள் உருவாயின. 1928-ல் வெவ் வேறு மாநிலங்களில் உருவான அந்தக் கட்சிகள் ஒருங்கிணைந்து அகில இந்திய தொழிலாளி-விவசாயிக் கட்சியை உருவாக்கின.

1927-28-ல் தொழிலாளிகளுக்கிடையே புதிய முன்னேற்றம் காணப்பட்டது. ரெயில்வே தொழிலாளிகள், துணிமில் தொழிலாளி களின் நெடியதும் மிகவும் ஒன்றுபட்டதுமான போராட்டங்கள் பம்பாயிலும் ஏனைய மையங்களிலும் வெடித்துக் கிளம்பின. கிர்ணிகாம்கார் தொழிற்சங்கம் உருவாயிற்று.

1928-பிப்ரவரி 3-ஆம் நாள் சைமன் கமிஷன் பம்பாய்க்கு வந்தபோது “எங்களுக்கு விடுதலை தேவை” “வேலை நேரம் எட்டுமணி நேரமாக நிர்ணயிக்க வேண்டும்” போன்ற கோஷங்களை முழங்கி முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளிகள்

www.tamilarangam.net



தெருக்களுக்கு வந்தனர்.

1928-டிசம்பரில் கல்கத்தாவில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற போது ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளிகள் மாநாட்டுப் பந்தலை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். முழுமையான விடுதலையைக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இதே கோரிக்கையைப் பிறகு ஓராண்டுக்குப் பின்னர்தான் லாகூரில் நடை பெற்ற மாநாட்டில் காங்கிரஸ் தீர்மானம் போட்டு நிறைவேற்றியது.

1927-28 காலகட்டத்தில் தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்கு கம்யூனிஸ்ட்டுகள்தான் காரணம். இந்த விஷயத்தை கம்யூனிஸ்ட்டு களிடம் எந்த விதமான அனுதாபமும் கிடையாத வி.பி.கார்னிக் 'இந்தியாவில் வேலை நிறுத்தங்கள்' என்ற தன்னுடைய நூலில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்ட்களுக்கு வேலை நிறுத்தங்களின் தலைமையைக் கைப்பற்ற முடிந்தது. எப்படியென்றால் தொழிலாளிகளின் மனோநிலையை அவர்கள் சரியாகவே யூகித்தனர். தொழிலாளிகளின் சக்திவாய்ந்த செயல்வீரர்களாக அவர்கள் அரங்குக்கு வந்தனர் ஒவ்வொரு மில்லிலும் தனியாக வேலை நிறுத்தம் மேற்கொள்வதின் வாயிலாக இல்லை. ஒரு பொது வேலை நிறுத்தத்தின் வாயிலாக மட்டும்தான் 'ராஷனலைசேஷன்' திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்பதை அவர்கள்தான் முதலில் புரிந்து கொண்டனர். அதைப் புரிந்து கொண்ட அவர்கள் தங்களுடைய விருப்பத்தை தொழிலாளிகளின் மீது திணிக்க அவசரம் காட்டவில்லை. சொந்த அனுபவத்தின் வாயிலாகவே தொழிலாளிகள் இதைப் புரிந்துகொள்ள அவர்கள் அனுமதித்தனர். ஒரு வேலை நிறுத்தத்திற்கு பக்குவமான பிறகு மட்டுமே அவர்கள் அதற்காக வாதிட்டனர். அவர்கள் செயலில் சளைக்காதவர்களும், அனுகுமுறையில் தயைதாட்சண்யம் பாராதவர் களும், அர்ப்பண உணர்வில் உறுதியாக நிற்பவர்களுமாவர். இந்த குண நலன்கள் அவர்களுக்கு ஆதாயத்தைத் தேடித்தந்தன. வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்த பிறகு பம்பாய் தொழிலாளிவர்க்கத்தின் மகத்தான தலைவர்களாகிவிட்டனர் அவர்கள்.

பம்பாயில்(மும்பை) மட்டுமின்றி வேறு பல தொழில் நகரங்களிலும் இதே நிலைமைதான். இந்த நகரங்களிலெல்லாம் வேலை நிறுத்தங்கள் நடைபெற்று, அவைகளின் முன்னணியில் கம்யூனிஸ்ட்டுகள் இடம் பெற்றனர். இதன் விளைவாக தொழிற்சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தன. உதாரணத்திற்கு சிலவற்றைக் குறிப்பிடலாம். பம்பாயில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1926-ல் 59, 544-ஆக இருந்தது. 1929 மார்ச் ஆவதற்குள் அது 200 325ஆக உயர்ந்தது. கிர்னி காம்கார் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்

www.tamilarangam.net



எண்ணிக்கை 324-ல் இருந்து 1929-ஆவதற்குள் 55000க்கு வந்து விட்டது. போராட்டங்களின் வாயிலாக எண்ணற்ற தொழிற்சங்கங்கள் உருவாகியதோடு பின்னர் அவை ஏ.ஐ.டி.யு.சி-யில் இணையவும் செய்தன.

தொழிலாளிவர்க்கத்தின் ஒன்றுபட்ட சக்தி வளர்ச்சியடைவதைக் கண்ணுற்ற அரசு மிரண்டுவிட்டது. தொழிலாளி இயக்கத்தை சர்வ வல்லமையுடன் அடக்கி ஒடுக்க அவர்கள் ஆயுதங்களுக்கு கூரேற்றினர். வேலை நிறுத்தங்களை சட்ட விரோதமாக்கும் நோக்கத்துடன்1928-மார்ச் மாதம் மத்திய சட்டமன்றத்தில் தொழிற் சர்ச்சை தொடர்பான ஒரு மசோதாவைக் கொண்டுவந்தனர்.

1929-மார்ச் 20 அன்று கம்யூனிஸ்ட்-தொழிலாளி விவசாயி இயக்கங்களின் தலைவர்களான 31 பேரை பிரிட்டீஷ் அரசு கைது செய்தது. ஏ.ஐ.டி.யு.சி-யுடன் துணைத் தலைவர் முசாஃபர் அகமத், உதவிச் செயலாளர் எஸ்.எஸ். டாங்கெ உதவிச் செயலாளர் எஸ்.எஸ். மிராஜ்கர், பெங்கால் டிரேட்யூனியன் பெடரேஷன் பொதுச் செயலாளர் கிஷோரிலால்கோஷ் போன்றவர்கள் பெங்கால் ஜுட் வர்க்கர்ஸ் யூனியன் செயலாளர் ராதாரமணமித்ரா போன்றவர்கள் அந்த முப்பதாயிரம் பேரில் உட்படுவர். இந்த வழக்கு விசாரணை ஒரு சிறு நகரமாகயி மீரத் நீதிமன்றத்தில் நடைபெற்றதால் இதை மீரத் சதியாலோசனை வழக்கு என்றழைத்தனர். இந்தியாவின் கம்யூனிஸ்ட் தொழிற்சங்க இயக்க வரலாற்றில் இந்த சதியாலோசனை வழக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். இது தற்காலிகமாக இருப்பினும் வீறுகொண்ட தொழிற்சங்க இயக்கத்தின்மீது விழுந்த பலமான அடியாகும் என்பதில் ஐயமில்லை.

www.tamilarangam.net

## 4.தொழிற்சங்க இயக்கத்தில் பிளவு

ஏ.ஐ.டி.யு.சி- வெவ்வேறு கருத்துக்களைக் கொண்ட தொழிலாளிகளின் ஒரு பொது அமைப்பாகும் கம்யூனிஸ்ட்கள் இதில் தீவிரமாகப் பணியாற்றத் துவங்கிய பிறகு இது பலம்பெற்றது என்பது மட்டுமின்றி இதன் போராட்டக்குணமும் அதிகரித்தது. 1926-29 காலகட்டத்தில் அதன் தலைமையில் நாடு தழுவிய போராட்டங்கள் ஏராளமாக நடைபெற்றன. அதற்குள் அந்த மத்தியத் தொழிற்சங்கத்தில் கம்யூயிஸ்ட்களும் இடது சாரிகளும் பலம் பெற்றனர். இதோடு இடதுசாரிகளுக்கும் அல்லாதவர்களுக்கும் இடையே கருத்து வேற்றுமை தலைதூக்கியது. இந்தக் கருத்து வேற்றுமை 1929-நவம்பர் இறுதியில் நாக்பூரில் நடைபெற்ற ஏ.ஐ.டி.யு.சி-யின் பத்தாவது மாநாட்டில் வெளிப்பட்டது.

மாநாட்டின் துவக்கத்திலேயே நிர்வாகக் குழுவில் கிர்னிகாம்கார் யூனியனை இணைக்கும் விஷயத்தில் சர்ச்சை கிளம்பியது. யூனியனின் உறுப்பினர் எண்ணிக்கை 55000 என்பதை வலது சாரிச் சீர்திருத்தவாதி களான தலைமை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது. 6000-கூடுதல் உறுப்பினர்கள் எண்ணிக்கையை ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் தயாராக வில்லை. காரசாரமான வாதங்களுக்கும் எதிர்வாதங்களுக்கும் பிறகு தலைவர் ஜவகர்லால் நேருவின் காஸ்டிங் ஓட்டுக்குப் பிறகு உறுப்பினர்கள் எண்ணிக்கை 40000 ஆக கணக்கிடலாம் என்றதிருத்தம் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

அடுத்து, இந்தியாவில் தொழிலாளிகளின் நிலைமையைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ராயல் கமிஷனை ஏ.ஐ.டி.யு.சி எப்படி அணுகவேண்டும் என்பதைப் பற்றிய சர்ச்சை எழுந்தது ராயல் கமிஷனுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று சீர்திருத்தவாதிகளான தலைவர்கள் சக்தியாக வாதாடினார்கள். இருப்பினும் ராயல் கமிஷனை முழுதாகவே புறக்கணிக்கவேண்டும் என்று எஸ்.வி.தேஷ்பாண்டே கொண்டு வந்த தீர்மானத்தை நிர்வாகக் குழு ஏற்றுக் கொண்டது. சீர்திருத்த வாதிகளான தலைவர்களுக்கு அது இரண்டாவது தோல்வியாகும்.

ஏகாதிபத்தியத்தின் சிருஷ்டியாகத்தான் ஐ.எல்.ஒ(சர்வதேசிய தொழிலாளி அமைப்பு)வை இடதுசாரிகள் அன்றைக்கு கணக்குப்போட்டனர். அதனுடன் ஒத்துழைப்பது தொழிலாளி வர்க்கத்தை நேரிடையாக ஏமாற்றுவதற்குச்சமமாகும். எனவே அந்த அமைப்பின் எதிர்கால மாநாடுகள் எதற்கும் ஏ.ஐ.டி.யு.சி-யின்

www.tamilarangam.net



பிரதிநிதியை அனுப்பவேண்டியதில்லை என்ற தீர்மானமும் சீர்திருத்தவாதிகளின் எதிர்ப்புடன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

பான் ப்சிஃபிக் டிரேட்யூனியன் செக்ரட்டேரியட்டுன் ஏ.ஐ.டி.யு.சி–யின் இணைப்பு தொடர்பாக காரசாரமான விவாதம் நடைபெற்றது. பெரும்பான்மை ஆதரவுடன் இணைப்புக்குச் சாதகமாக முடிவெடுக்கப்பட்டது.

கௌன்சிலின் பெரும்பான்மை முடிவை ஏற்பதற்கு மாறாக சீர்திருத்தவாதிகளான தலைவர்கள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர். அவர்கள் என்.எம். ஜோஷியின் இல்லத்தில் தனியாகக் கூட்டம் போட்டனர். அந்தக் கூட்டத்தில் வி.வி.கிரி, பி.சிவராவ், சமன்லால், மிருணாள் காந்தி பாசு, கெ.சி. சௌத்ரி போன்றவர்கள் பங்கேற்றனர். தொடர்ந்து மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டா மென்று முடிவெடுத்தனர். ஜோஷி, சமன்லால் போன்றவர்கள் தயாரித்த ஒரு அறிக்கையைக் கூட்டத்தில் படித்தனர். தங்களுக்கு எந்த வகையிலும் ஒத்துழைக்க முடியாத ஒரு கோட்பாட்டை நோக்கி ஏ.ஐ.டி.யு.சி-யை அழைத்துச் செல்ல பெரும்பான்மையினர் முயற்சிப்பதாக அதில் குற்றம் சாட்டினர். இந்த நிலைமையில் மாநாட்டிலிருந்து வெளிநடப்பு செய்வதைத்தவிர தங்களுக்கு வேறு வழியில்லை என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

மிருணாள் காந்தி பாசுவும் வேறு சிலரும் பிறிதொரு அறிக்கையை விட்டுக்கொண்டு தொழிற்சங்க காங்கிரசில் இருந்தும் வெளியேறினர். மற்றொரு அறிக்கை விடுத்தவாறு இந்தியன் சிமென்ஸ்யூனியன், மாரினேர்ஸ் யூனியன், குவார்டர் மாஸ்டர்ஸ் யூனியன் போன்றவையும் ஏ.ஐ.டி.யு.சி-யை விட்டு வெளியேறின. அந்த மத்தியத் தொழிற்சங்கத்தின் கொள்கையில் அடிப்படையான மாறுதல் ஏற்பட்டிருப்பதாக ஒவ்வொரு அறிக்கையிலும் அழுத்தமாகக் கூறப்பட்டிருந்தன.

இதற்குப் பிறகு ஏ.ஐ.டி.யு.சி 94000 உறுப்பினர்களை பிரதிநிதித் துவப்படுத்தும் 21 தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பாகச் சுருங்கிவிட்டது. பொது மாநாட்டில் பான்பசிஃபிக் யூனியன் செக்ரடேரியட் தொடர்பான தீர்மானத்தை எஸ்.வி. தேஷ்பாண்டே அதிகாரபூர்வமாக திரும்பப் பெற்றுக்கொண்டார். சுபாஷ்சந்திரபோஸ் தலைவராகவும், பங்கிம் சந்திர சாட்டர்ஜி துணைத் தலைவராகவும், எஸ்.வி.தேஷ்பாண்டே பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஏ.ஐ.டி.யு.சி- மாநாட்டில் இருந்து வெளிநடப்புச் செய்து அமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் சிலர் 1929-டிசம்பர் முதல்தேதி அன்று தனியாகக் கூட்டம் போட்டு, இந்தியன் டிரேட் யூனியன்

www.tamilarangam.net



ஃபெடரேஷன் என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பை உருவாக்க முடிவெடுத்தனர். வி.வி.கிரியின் தலைமையில் ஒரு தாற்காலிகக் குழுவை உருவாக்கினர். புதிய அமைப்பின் சட்டத்தில் "கம்யூனிஸ்ட் சார்புடைய ஆட்களையும் சங்கங்களையும் ஃபெடரேஷனில் இணைக்கக் கூடாது" என்று கூட்டம் முடிவெடுத்தது.

இவ்வாறு 1929-ல் ஏ.ஐ.டி.யு.சி-பிளவுபட்டது. இந்தப் பிளவு "இந்தியாவின் தொழிலாளர் இயக்கத்தில் தண்ணீர் கலக்காத வலது சாரிக் கோட்பாட்டின் துவக்கத்தையும் உருவாக்கத்தையும் தான் சுட்டிக் காட்டுவதாக" "சுகோமல்சென் தன்னுடைய 'இந்தியத் தொழிலாளி வர்க்க வரலாற்'றில் எழுதினார். இந்தப் பிளவு வாதிகளின் நடவடிக்கைகளுக்கு அரசின் ஆசியிருந்தது என்பது ஒரு ரகசிய மில்லை. அதுமட்டுமின்றி உலகின் சீர்திருத்த வாதிகளான தொழிலாளர் அமைப்புகளின் உதவியும் புதிய அமைப்புக்குக் கிடைத்தது.

ஏ.ஐ.டி.யு.சி-யில் இருந்து சீர்திருத்தவாதிகளின் ஒரு பிரிவு வெளியேறிச் சென்ற போதிலும், எஞ்சியவர்களும் கருத்தொற்றுமை யாக இருக்கவில்லை. வெவ்வேறு கருத்துடையோர் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டனர். அந்த மோதலின் அரங்க மேடைதான் 1931-ஜுலை மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற ஏ.ஐ.டி.யு.சி-யின் பதினோராவது மாநாடு. இம்முறை மோதலுக்கு அடிப்படைக் காரணம் தொழிலாளி வர்க்கத்திற்கு சுதந்திரமான ஒரு அரசியல் பங்கேற்பு இருக்க வேண்டுமா என்பதாக இருந்தபோதிலும், உடனடிக் காரணம் கிர்னிகாம்கார் யூனியனுடைய சரியான பிரதிநிதித்துவம் தொடர்பான சர்ச்சையாகும். ஜி.எல். கண்டால்கரின் தலைமையில் ஒரு குழுவும் எஸ்.வி. தேஷ்பாண்டே தலைமையில் இன்னொரு குழுவும் ஏ.ஐ.டி.யு.சி-யின் பொதுக் குழுவில் கிர்னிகாம்கார் யூனியனின் பிரதிநிதிகளாக பங்கேற்பதற்கான உரிமை தொடர்பாக ஒருவருக்கொருவர் எதிர்மாறான உரிமை வாதங்களை எழுப்பினர். இந்தப் பிரச்சனையை கிரடன்ஷ்யல் கமிட்டியிடம் ஆய்வுக்காக விடப்பட்டது. ஆனால் கிரடன்ஷ்யல் கமிட்டியை நியமனம் செய்வதில் உறுப்பினர் என்ற நிலையிலும், நிர்வாகக் குழு தலைவர் என்ற நிலையிலும் தலைமை தாங்கிய சுபாஷ் சந்திரபோஸ் இரண்டு ஓட்டளித்தார். கண்டால்கர் குழுவுக்குத்தான் பிரதிநிதித்துவ உரிமை என்று கிரடன்ஷ்யல் கமிட்டி எடுத்துக் கூறியது. தொடர்ந்து கமிட்டியின் அறிக்கையை முதலில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சுபாஷ் சந்திரபோஸ் 'ரூலிங்' அளித்தார். கம்யூனிஸ்ட்கள் அதை எதிர்த்து கேள்வி எழுப்பினர். அதுமட்டுமின்றி பி.டி. ரணதிவே தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத்

www.tamilarangam.net



தீர்மானத்திற்கு நோட்டீஸ் அளித்தார். தீர்மானத்திற்கு ஆதரவாக 24 வாக்குகளும் எதிராக 26 வாக்குகளும் பெற்றதால் தீர்மானம் தள்ளுபடியாகிவிட்டது. அதற்குள் மாநாட்டிற்குள் முழுக்க குழப்பம் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் நிர்வாகக் குழுக் கூட்டத்தையும் பொது மாநாட்டையும் தலைவர் காலவரையின்றி ஒத்திவைத்தார்.

ஏ.ஐ.டி.யு.சி-யில் இருந்தும் கம்யூனிஸ்ட் குழு விலகியதோடு ஜூலை 6-ஆம் தேதி தனியாகக் கூட்டம் போட்டது. அந்தக் கூட்டத்தில் 12-தொழிற்சங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். ரெட் டிரேட் யூனியன் காங்கிரஸ் (சிகப்புத் தொழிற்சங்க காங்கிரஸ்) என்ற பெயரில் ஒரு புதிய தொழிற்சங்க அமைப்புக்கு உருக்கொடுத்தனர். டி.பி.குல்கர்னியை தலைவராகவும், எஸ்.வி.தேஷ்பாண்டே, எஸ்.ஜி.சர்தேசாய் ஆகியோரை செயலாளர்களாகவும் தேர்ந்தெடுத்தனர்.

மறுபக்கத்தில் ஒத்திவைக்கப்பட்ட ஏ.ஐ.டி.யு.சி-மாநாடு ஜூலை 7-ஆம் தேதி சுபாஷ் சந்திரபோஸின் தலைமையில் நடைபெற்றது. அதன் தலைவராக ஆர்.எஸ்.ரூய்க்கரையும் பொதுச் செயலாளராக முகுந்தலால் சர்க்காரையும், பொருளாளராக சுபாஷ் சந்திர போஸையும் மாநாடு தேர்ந்தெடுத்தது.

இவ்வாறு பிளவின் பயனாக மூன்று தொழிற்சங்க தேசிய மையங்கள் உருவாயின. முதல் பிளவுக்கு ஏ.ஐ.டி.யு.சி-யின் சீர்திருத்த வாதிகள்தான் காரணமாக இருந்தனர். இரண்டாவது பிளவுக்கு, மார்க்சியத்தில் நம்பிக்கையுடைவர்களுக்கும் இடதுசாரி தேசியவாதி களுக்கும் இடையிலான கருத்துப் போராட்டம்தான் காரணமாயிற்று தொழிலாளிகளில் ஒரு பகுதி அனைத்து கேந்திர அமைப்பு களிலிருந்தும் விலகி நின்றனர்.

ஏ.ஐ.டி.யு.சி-யில் ஏற்பட்ட பிளவு தொழிலாளிகளின் தீவிரமான எதிர்ப்புச் சக்தியை பலவீனப்படுத்தியது. ஊதியத்தை வெட்டிச் சுருக்குவது, ராசணலைசேஷன் அமுலாக்கம், வேலைநீக்கம் போன்ற முதலாளிகளின் ஆக்கிரமிப்புச் சக்தி வேகம் பெற்றது. இது கடுமையான பொருளாதார நெருக்கடியின் காலம் என்பதையும் கவனிப் பார்க்கவேண்டும். அரசும் பலம்கொண்ட மட்டும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது வேலை நிறுத்தங்களை ஒருங்கிணைத்ததற்காகவும் சட்டத்திற்குட்பட்டு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகவும் நூற்றுக்கணக்கான தொழிற்சங்க ஊழியர்கள் தண்டிக்கப்பட்டனர். தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அவைகளின் தலைமையில் நடைபெற்ற போராட்டங்களின் எண்ணிக்கையும் குறைந்தன. 1931–ல் 166 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன என்றால், 1932–ல் 118 மட்டுமே

www.tamilarangam.net



நடைபெற்றன. 1931-ல் இரண்டு லட்சத்திற்கு மேல் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர் என்றால் 1932-ல் ஒரு லட்சத்திற்குமேல் தான் தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்தனர். இந்த நிலைமையைத் தாண்டிச் செல்ல தொழிற்சங்கங்களிடையேவும் தொழிலாளிகளிடையேவும் ஒற்றுமை தேவைப்பட்டது. அதற்கான முயற்சியும் விரைவிலேயே மேற்கொள்ளப்பட்டது.

www.tamilarangam.net

## 5. ஒற்றுமையை நோக்கி முன்னேற்றம்

**1929-ல்** உலக முதலாளித்துவம் அதன் வரலாற்றிலேயே மிகவும் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டது. அந்தக் நெருக்கடியிலிருந்து இந்தியாவும் மீளவில்லை. இங்கு மற்ற நாடுகளைப் போலவே, நெருக்கடியின் மொத்தச் சுமையையும் மக்களின் முதுகில் ஏற்றிவைக்கும் பொருளாதார நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. அதன் விளைவாக தொழிலாளிகள் வேலை நீக்கத்தையும், ஊதியக் குறைப்பையும் போன்ற ஆபத்துக்களை எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று வேலை நீக்கமும் புதிய தொழில் வாய்ப்பு இல்லாமையும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனையை கடுமையாக்கின...

பொருளாதார நெருக்கடிக்கும் அதன் படுநாச விளைவுகளுக்கும் எதிராக பலம் வாய்ந்த எதிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளும் தேவை உணரப்பட்டபோதிலும், அமைப்பு ரீதியிலான ஒற்றுமையின்மையால் பரவலாகவும் தீவிரமாகவும் அத்தகைய எதிர்ப்புப் போராட்டத்தை ஒருங்கிணைக்க முடியாமல் போயிற்று. இவ்வாறு முடியாமற் போனதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அந்தக் காலத்தில் நடைபெற்ற அரசியல் போராட்டங்களில்தான் பொருளாதாரப் போராட்டங்களைவிட தொழிலாளிகள் ஆர்வம் காட்டினர். எனவே நாடு முழுக்க சூறைக்காற்றுபோல் சீறியடித்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தொழிலாளிகள் தீவிரமாகப் பங்கேற்றனர்.

அரசியல் போராட்டங்களில் மூழ்கித் திளைத்த போதிலும் தொழிலாளிவர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டங்களும் ஒட்டு மொத்ததில் பெருகிக்கொண்டுதான் இருந்தன. 1929-ல் தொழில் பிரச்சனைகளின் எண்ணிக்கை 141-ஆக இருந்தது. 1930-ல் அது 148-ஆகவும் 1931-ல், 166-ஆகவும் அதிகரித்தது அதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. 1936-ல் நடைபெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 157-ஆக இருப்பினும், அவைகளில் ஒட்டு மொத்தமாகப் பங்கேற்ற தொழிலாளிகளின் எண்ணிக்கை 1 70 000 பேராகும். வங்கத்தில் ஹேஸ்டிங்ஸ் சணல் ஆலையில் நடைபெற்ற வேலை நிறுத்தம், ஷோலாப்பூர் காட்டன்மில்லில் நடைபெற்ற வேலை நிறுத்தம், பெரம்பூர் ரெயில்வே ஒர்க்ஷாப்பில் நடைபெற்ற வேலை நிறுத்தம் போன்ற அக்காலத்திய சில வேலைநிறுத்தப் போராட்டங்களை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது.

www.tamilarangam.net



ஏ.ஐ.டி.யு.சி-யின் இரண்டாவது பிளவில் இருந்து உருவான ரெட் டிரேட்யூனியன் காங்கிரஸ், இந்தியாவில் தொழிலாளர் இயக்கத்தை தளர்த்தியபோதிலும், குறைந்த காலகட்டத்திற்குள் அதன் நடவடிக்கைகள் தொழிலாளிகளுக்கு அரசியல் விழிப்புணர்வூட்டு வதில் பாராட்டத்தக்க பங்காற்றியது. தொழிலாளிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கான போராட்டம் பலம் பெறுவதுடன், தொழிலாளிகளை அரசியல் விழிப்புணர்வு பெறச்செய்வதிலும் ரெட் டிரேட்யூனியன் காங்கிரஸ் சக்திமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. இளைஞர்களாகிய தொழிலாளிகளுக்கிடையில் புரட்சி மனோபாவத்தை வளர்த்தெடுக்கவும், 1930-களின் காலகட்டத்தின் மத்தியில் தொழிலாளிகளின் இளைஞர் அமைப்பு களை உருவாக்குவதற்கும் ரெட் டிரேட் யூனியன் காங்கிரஸ் முன்னின்று செயலாற்றியது.

இந்தியாவில் சோஷலிசத்தின் முன்மாதிரியில் ஒரு தொழிலாளி விவசாயி குடியரசை நிறுவுவது, தொழிலாளிகளின் தேவைகளை வென்றெடுப்பது ஆகிய லட்சியங்களோடுதான் இளைஞர் அமைப்பு நிறுவப்பட்டது. இந்த லட்சியங்களை வென்றெடுப்பதற்காக உயிர்த்துடிப்புமிக்க தொழிலாளிக் கட்சிகளுடனும், தொழிற்சங்க அமைப்புகளுடனும் ஒத்துழைப்பதாக இந்த அமைப்பு அறிக்கை வெளியிட்டது.

இவ்வாறு ரெட் டிரேட் யூனியன் காங்கிரஸ் சுறுசுறுப்புடன் இயங்கியபோதிலும் தொழிலாளிகளுக்கிடையிலான பிளவு தொழிலாளிகளின் போராட்டங்களை கடுமையாகப் பாதித்தது. பல்வேறு இடங்களில் நடைபெற்ற தொழிலதிபர்களின் திடீர்த் தாக்குதலை எதிர்கொள்ள தொழிலாளிகளால் இயலவில்லை. எதிர் கொண்ட இடங்களில் பலத்த இழப்பிற்குள்ளாயினர். தொழில் போராட்டங்களில் வெற்றியீட்ட ஒற்றுமையுடன் இணைந்த போராட்டம் தவிர்க்க முடியாத ஒன்று என்பதை இது தொழிலாளி களுக்கு உணர்த்தியது. இந்தப் படிப்பினை ஒற்றுமை முயற்சிக்கு அவர்களைத் தூண்டியது.

1931-ல் இந்தியன் தொழிலாளி பெடரேஷன் தலைவர்களான ஆர்.ஆர்.பாக்லெ, என்.எம்.ஜோஷி, சமன்லால் ஆகியோர் இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கிடையில் ஒரு வகையான ஒத்துழைப்பை நிறுவ முயன்றனர். இதற்கிடையே ஏ.ஐ.டி.யு.சி-பொதுச் செயலாளர் முகுந்தலால் சர்க்கார் ஏ.ஐ.டி.யு.சி-யில் இருந்து பிரிந்து சென்றவர்களை திரும்பிவருமாறு அழைத்தார். இந்த ஒற்றுமை முயற்சி ஏ.ஐ.டி.யு.சி-க்கும் இந்தியன் டிரேட் யூனியன் பெடரேஷனுக்கும் மத்தியில் மட்டுமே

www.tamilarangam.net



நடைபெற்றன. அதற்கு கோட்பாட்டியல் தடைகள் எதுவும் குறுக்கிடாக இருக்கவில்லை.

இதற்கிடையே அகில இந்திய ரெயில்வே பெடரேஷனும் சில ஒற்றுமை முயற்சிகளை மேற்கொண்டது. அவர்கள் 10-5-1931ல் பம்பாயில் ஒரு தொழிற்சங்க மாநாட்டைக் கூட நடத்தினர். அந்த மாநாடு ஜமுநாதாஸ் மேத்தாவை தலைவராகவும், வி.வி.கிரியையும் பி.சிவராவையும் வேறு சிலரையும் உறுப்பினர்களாகவும் கொண்டு ஒரு இணைப்புக் கமிட்டியை நிறுவியது. தொழிற்சங்க இயக்கத்தில் அமைப்பு ரீதியிலான ஒற்றுமையைப்பற்றி கலந்துபேசி ஒரு அறிக்கை தருவதற்காகத்தான் கமிட்டி அமைக்கப்பட்டது. கம்யூனிஸ்ட்களைத் தவிர்த்த இணைப்பைத்தான் அவர்கள் விரும்பினர்.

1932-செப்டம்பர் 10, 12-தேதிகளில் சென்னையில் கூடிய ஏ.ஐ.டி.யு.சி-யின் 12-வது மாநாடு இணைப்புக் கமிட்டியின் கருத்தை நிராகரித்துவிட்டது. பதிலுக்கு, கிர்ணிகாம்கார் யூனியன் தயாரித்த ஐக்கிய மேடையை அடிப்படையாகக் கொண்ட சில வேண்டுகோள் களை இணைப்புக் கமிட்டியிடம் சமர்ப்பித்தது.

1933-பிப்ரவரிக்கு முன் சில ரெயில்வே தொழிற்சங்கங்கள் 'நேஷனல் பெடரேஷன் ஆஃப் லேபர்' என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கியிருந்தன. அதற்கு ஜமுநாதாஸ் மேத்தா, வி.வி.கிரி, குருஸ்வாமி ஆகியோர் உள்ளிட்ட ஒரு தாற்காலிகக் குழு அமைக்கப்பட்டது. 1933-ஏப்ரல் 19-ஆவது நாள் கல்கத்தாவில் ஒரு சிறப்பு மாநாட்டில் இந்தியன் டிரேட் யூனியன் பெடரேஷனும், நேஷனல் டிரேட் யூனியன் ஆஃப் லேபரும் இணைத்து நேஷனல் டிரேட் யூனியன் பெடரேஷன் உருவாக்கப்பட்டது. விரைவிலேயே இந்த அமைப்புக்குள்ளும் பிளவு தலைதூக்கியது. என்.எஃப்.டி.யு-வில் ஒரு சங்கத்தை இணைப்பது தொடர்பாக சர்ச்சை கிளம்பி, அதன் முதலாவது மாநாட்டிலிருந்து 6 சங்கங்களின் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர். அவர்கள் முகமது தாவூதின் தலைமையில் ஆல் இந்தியா ஃபெடரேஷன் ஆஃப் லேபர் என்ற பெயரில் இன்னொரு அமைப்பை உருவாக்கினர். துவக்கத்திலேயே அதன் முடிவும் நிகழ்ந்தது.

ஏ.ஐ.டி.யு-சியின் நிர்வாகக்குழு 1935-ஜனவரியில் நாக்பூரில் கூட்டி கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் தொழிற்சங்கங் களுக்கிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கான முயற்சியை மேற்கொள்ள முடிவெடுத்தது. நிபந்தனைகள் கீழ்வருமாறு.

1) வர்க்கப்போர் என்ற அடிப்படைத்தத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2) எந்த சர்வதேசிய அமைப்பிலும் உறுப்பினராகச் சேரக்கூடாது.

www.tamilarangam.net



3) ஐ.எல்.ஒ-வில் பிரநிதித்துவம் பெறவேண்டுமா இல்லையா என்பதை வருடாவருடம் முடிவு செய்ய வேண்டும்

4)'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்ற கோட்பாட்டை ஒப்புக் கொள்ள வேண்டும்.

5)இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் மையத் தொழிற்சங்க அமைப்பு என்ற முறையில் ஏ.ஐ.டி.யு.சி-யை அங்கீகரிக்க வேண்டும்.

1935-மார்ச்சில் ஏ.ஐ.டி.யு.சியின் இரண்டு பிரதிநிதிகளான ஹரீந்திரநாத் சாஸ்த்ரியும், ஆர்.எஸ்.ரூய்க்கரும் என்.எம்.ஜோஷி, வி.வி.கிரி, சிவராவ் ஆகிய தலைவர்களைச் சந்தித்து ஒற்றுமைப் பிரச்சனை குறித்துப் பேசினர். மார்ச் 12-அன்று அவர்கள் ஒரு கூட்டறிக்கை விடுத்தனர். தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுக்கு அறிக்கையில் வருத்தம் தெரிவித்தனர். முழு ஒற்றுமை சாத்தியமில்லையாயினும் பல்வேறு அமைப்புகளும் கூட்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய முறையில் சில உடன்பாடு களை வகுத்துக்கொள்ள வேண்டும் என்று கருத்து வெளியிட்டனர். இதற்காக ஒவ்வொரு அமைப்பிலிருந்து 10 பிரதிநிதிகள் வீதம் உள்ளிட்ட ஒரு குழுவைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டது. அந்தக் குழுவிடம் கூட்டு நடவடிக்கைகளுக்கான விதிகளைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இந்த விதிகளை அமைப்புகளின் ஒப்புதலைப்பெற்று அனைத்து தொழிற்சங்கங்களும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்த அறிக்கையைப் பின்னர் என்.டி.யு.எஃப்- ஏ.ஐ.டி.யு.சி- பொதுக்குழுக்கள் அங்கீகரித்தன.

ஏ.ஐ.டி.யு.சி-யின் பதினான்காவது மாநாடு 1935 ஏப்ல் 19, 21-தேதிகளில் கல்கத்தாவில் கூடியது. அதற்கு முன் மாநாட்டுப்' பிரதிகளை அனுப்பி வைக்குமாறு இந்தியாவின் அனைத்துத் தொழிற்சங்கக் குழுக்களுக்கும் மாநாட்டு வரவேற்புக்குழு கடிதம் எழுதியது. ரெட் டிரேட் யூனியனைக் கலைத்துவிட்டு ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைய முடிவெடுத்த அதன் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்கள் ஒற்றுமை முயற்சியை மேலும் பலப்படுத்தி விரைவுபடுத்த ஏ.ஐ.டி.யு.சி-தலைமைக்கு கோரிக்கை விடுத்தனர். விரைவிலேயே தொழிற்சங்க அரங்கில் பரவலான ஒற்றுமை ஊட்டி வளர்க்கப்பட்டது.

அதோடு பலவீனமாகக் கிடந்த தொழிற்சங்க இயக்கம் புத்துயிர் பெற்றது. அது கூடுதல் துடிப்புடன் இயங்கத் துவங்கியது. இதற்கு மிகவும் உதவக்கூடிய நிகழ்ச்சிப் போக்குகள் அரசியல் அரங்கிலும் உருவாயின. இர்வின் பிரபுவுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இரண்டாம் சட்ட மறுப்பு இயக்கத்தை மகாத்மா காந்தி

www.tamilarangam.net



திரும்பப்பெற்றவுடன் நாடு முழுக்க இளைஞர்கள் ஏமாற்றத்திற்குள்ளாயினர். அவர்களுக்கு காந்தியத்தின் மீதிருந்த நம்பிக்கை அழிந்தது. இந்தக் கட்டத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் நடவடிக்கைகள் பலம்பெற்றன. காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி உருவானது. இடதுசாரிக் கட்சிகளின் புத்துணர்வு இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் நவீனமையமாக்கத்திற்கு இட்டுச்சென்றது.

அதற்குள் முதலாளித்துவ நெருக்கடி தாற்காலிகமாக முடிவுக்கு வந்தது. தொழில்கள் வளரவும் செழிக்கவும் துவங்கின. தொழிலாளிகளின் எண்ணிக்கையும் கூடியது. இந்தச் சூழ்நிலையில் தொழில் மந்த நிலையின் பேரில் வெட்டிக் குறைக்கப்பட்ட ஊதியத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த தொழிலதிபர்கள் முனைந்திருக்க வேண்டும். ஆனால் லாபப் பேராசைமிக்க அவர்கள் அதற்கு மறுத்துவிட்டனர். தொழிலாளிகளை மிருகத்தனமாகச் சுரண்டவே அவர்கள் முடிவு செய்தனர். எனவே வெட்டிக் குறைக்கப்பட்ட ஊதியத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த அவர்கள் கடுமையான போராட்டம் நடத்த வேண்டியதாயிற்று. இந்தக் காலகட்டத்தில் கேசவ்ராம் துணிமில்லிலும் அகமதாபாத் துணிமில்களிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும். கான்பூர் மில் தொழிலாளிகளும் வங்கத்து சணலாலைத் தொழிலாளிகளும் மேற்கொண்ட போராட்டங்களும் நமது சிரத்தைக் குரியவைகளே. 26500 தொழிலாளிகள் பங்கேற்ற பீகார் ரெயில்வேத் தொழிலாளர் போராட்டத்தைப் பற்றிச் கூறாமலிருக்க முடியாது.

சட்டமியற்றுதல்களின் வாயிலாகவும் ஆர்டினென்ஸ்கள் வாயிலாகவும், கறுப்புச் சட்டங்களின் வாயிலாகவும் போராட்டங்களைச் சட்ட விரோதமாக்கும் முயற்சிகள் பிசுபிசுத்துவிட்டன. 1935-ல் 1 44 217 தொழிலாளிகள் பங்கேற்ற 145 வேலை நிறுத்தங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. 1936-ல் 1 68 029 தொழிலாளிகள் பங்கேற்ற 157 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இவ்வாறு வேலைநிறுத்துங்கள் பலமடைந்து பெருகிக் கொண்டிருக்கும்போதே, பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கையும் பெருகியது. 1935-ல் 213 சங்கங்கள் பதிவாயின. அவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 2 84 918 ஆகும். அடுத்த ஆண்டே சங்கங்களின் எண்ணிக்கை 241 ஆக உயர்ந்தது. உறுப்பினர்களின் எண்ணிக்கையும் கூடுதலானது.

இக்கால கட்டத்தில் தொழிலாளர் இயக்கம் வெவ்வேறு மாநிலங்களின் பெரும்பாலும் அனைத்து தொழில்மையங்களிலும் பரவியது. வங்கம், பம்பாய், சென்னை மாகாணங்கள் இந்த விஷயத்தில் முன்னணியில் இருந்தன. தொழிற்சங்கங்களுடையவும்

www.tamilarangam.net



அவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் ரெயில்வேதான் முதலிடத்தில் இருந்தது. 50 தொழிற்சங்கங்களும் 1 45 758 உறுப்பினர்களும் கொண்டவையாக அவை இருந்தன. அடுத்த இடத்தில் பஞ்சாலைத் தொழிலாளிகளும் மூன்றாவது இடத்தில் கப்பல் தொழிலாளிகளும் இருந்தனர்.

இந்தக் காலத்தில் அரசு, போராடும் தொழிற்சங்கங்களுக்கும் எதிராகத் திரும்பியது. 1935-ஜனவரியில் கிர்ணி காம்கார் யூனியனின் பதிவை (ரெஜிஸ்ட்ரேஷன்) அரசு ரத்து செய்தது. கம்யூனிஸ்ட் செல்வாக்கிலுள்ள வேறு சில தொழிற்சங்கங்களும் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட்டன.

ஏ.ஐ.டி.யு.சி-யின் 15-ஆவது மாநாடு 1936 மே மாதம் 17, 18-தேதிகளில் மணிபென்காரா அம்மையாரின் தலைமையில் பம்பாயில் நடைபெற்றது. ரெட் டிரேட் யூனியன் இணைந்த பிறகு நடைபெறும் முதல் மாநாடு. மாநாட்டுக்கு ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைந்த சங்கங்களின் 9 37 50 உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் இருந்தது. மாநாடு சிப்நாத் பானர்ஜியைத் தலைவராகவும் மணிபென்தாராவை பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுத்தது.

1935-36 காலத்தில் தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சி, பிந்திய ஆண்டுகளில் நடைபெற்ற வெகுஜனப் போராட்டத்தில் பிரதான பங்கேற்க தொழிலாளிகளைத் திறன் பெறச் செய்தது.

www.tamilarangam.net

# 6.ஒற்றுமை புனரமைக்கப்படுகிறது

**1935-ஆம் ஆண்டின் 'இந்தியா ஆக்ட்' டின்படி 1937-ல் வெவ்வேறு மாநிலங்களில் தேர்தல் நடைபெற்றன. மக்களில் 13 சதவிகிதம் பேருக்கு மட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட்டிருப்பினும் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. காங்கிரஸ் அமைச்சரவைகள் மாநிலங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டன. அப்போது ஒரு பிரச்சனை எழுந்தது. இந்திய தேசிய காங்கிரசும் அதன் அரசுகளும் தொழிலாளி வர்க்கத்திடம் எத்தகைய அணுகுமுறையைக் கடைபிடிக்கும்? பம்பாய் தொழில் சங்கச் சட்டம் அதற்கான விடையாக அமைந்தது. மிகவும் பிற்போக்கானதும், தொழிலாளி வர்க்க நலன்களுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதாகவும் இருந்தது அந்தச் சட்டம். தொழிலாளி வர்க்க நலன்களை பூர்ஷ்வா நலன்களுக்கு அடிபணியச்செய்வதுதான் அதன் நோக்கம் 1938-நவம்வர் 7-ஆம் தேதி ஒரு வேலை நிறுத்தம் மேற்கொண்டு தொழிலாளிகள் அந்தச் சட்டத்திற்கெதிரான தங்களுடைய கண்டனத்தை வெளிக்காட்டினர்.**

*குறைந்த கால அளவில் ஆட்சி புரிந்த காங்கிரஸ் அமைச்சரவைகள் தொழிலாளர் போராட்டங்களை அடக்கி ஒடுக்கி போராட்டங்களுக்கெதிராக மேற்குறிப்பிட்டதைப் போன்ற சட்டங்களைப் பயன்படுத்தினர். அவர்களுடைய ஆட்சியில் ஹப்ரசிங் என்ற தொழிற்சங்கத் தலைவர் மீது 'டிரக்'கை ஏற்றி அவரைக் கொன்றனர். ஜாம்ஷெட்பூரில் 'டிஸ்கோவில் வேலைநிறுத்தத்தை ஒட்டிய மறியலின் போதுதான் இந்த கோரமான நிகழ்ச்சி நடைபெற்றது. அசாமில் திக்போவில் அசாம் ஆயில் கம்பெனி தொழிலாளிகளின்மீது ராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. மூன்று தொழிலாளிகள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து, விசாரணைக்குழுவிடம் சாட்சி சொன்னதற்காக 60 தொழிலாளிகள் பழிவாங்கப்பட்டனர். 1938 ஆகஸ்ட் 6-ஆம் தேதி அகில இந்திய திக்போய் தினமாகக் கடைபிடிக்க ஏ.ஐ.டி.யு.சி அறைகூவல் விடுத்தது. அந்த நாள் கடைப்பிடிப்பை ஒட்டி சென்னை பம்பாய் போன்ற இடங்களில் மோதல்களும் துப்பாக்கிச் சூடுகளும் நடைபெற்றன. சுருங்கக் கூறினால் தங்களுடைய உரிமைகளை மேற்கொண்டபோது அவற்றை அடக்கி ஒடுக்குவது என்ற கொள்கையை காங்கிரஸ் அரசுகள் கடைப்பிடித்தன.*

*இருப்பினும் அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளை எதிர்க்கொண்ட தொழிலாளிகள் போராட்டத்தின் பாதையிலேயே உறுதியாக*

www.tamilarangam.net



நின்றனர். 1937-38 காலகட்டத்தில் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை வளர்ச்சி அதைத்தான் சுட்டடிக்காட்டுகிறது. 1937-ல் 379 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. 1939-ல் அது 399 ஆக உயர்ந்தது. இந்த வேலை நிறுத்தங்களில் 1937-ல் வங்கத்தில் சணல் ஆலைத் தொழிலாளிகள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் குறிப்பிடத்தக்கவை களில் முதன்மையானதாகும். 74 நாட்கள் நீடித்த அந்த வேலை நிறுத்தத்தில் 2 1/4 லட்சம் தொழிலாளிகள் பங்கேற்றனர். இந்த வேலை நிறுத்தத்தை ஒருங்கிணைத்து இயக்கத்தில் கம்யூனிஸ்டுகள் மிக முக்கியமான பங்கேற்றனர். 1937-ஜுலை மாதத்தில் கான்பூர் மில் தொழிலாளிகள் மேற்கொண்ட வேலை நிறுத்தமும் குறிப்பிடத்தக்க தாகும். இந்த வேலை நிறுத்தத்தைக் குலைக்க கோவிந்த் வல்லப் பந்தின் தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை கற்ற வித்தை பதினெட்டையும் கையாண்டு பார்த்தது. ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறவிடாது தடையுத்திரவு போட்டனர். 'கிரிமினல் புரொஸீஜர் கோடு'க்கு ஏற்ப தண்டனை நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆயினும் வேலை நிறுத்தத்தை தோற்கடிக்க முடியவில்லை.

இந்தக் கட்டத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களின் சிறப்புத தன்மையை சுகோமல்சென் தன்னுடைய 'இந்தியத் தொழிலாளி வர்க்க வரலாறு" நூலில் இலக்கமிட்டு வரிசைப்படுத்தியிருக்கிறார். அவை கீழ்வருமாறு.

முதலாவதாக, வேலை நிறுத்தங்கள் ஒன்றுபடுத்தப்பட்ட தொழில் மையங்களில் ஒதுங்கி நிறுப்பதற்கு மாறாக நாடு முழுவதுமுள்ள தொழில் மையங்களுக்கும் பரவிப்படர்ந்தன.

இரண்டாவதாக, அதுவரை தொழிற்சங்க நடவடிக்கைகளின் எல்லைக்கு வெளியே நின்ற பல்வேறு சிறு தொழில்களுக்கும் அடிப்படைத் தொழில்களுக்கும் கூட வேலை நிறுத்தம் பரவியது.

மூன்றாவதாக, இக்காலத்திய போராட்டங்கள் எதிர்த்தாக்குதல் தன்மை கொண்டதாக இருந்தன.

நான்காவதாக, வேலை நிறுத்தங்களில் பலவும் வெற்றிபெற்றன.

ஐந்தாவதாக, பொருளாதாரத் தேவைகளுடன், சங்க அங்கீகாரப் பிரச்சனையும் பலத்த கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது.

1937-38 காலத்திய வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை பெருகியதுடன் கூடவே சங்கங்களின் எண்ணிக்கையும் உயர்ந்தது. 1936-37-ல் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 271-ஆகவும் அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை 2 61 047-ஆகவும் இருந்தன. 1938-39-ஆவதற்குள் பதிவு செய்யப்பட்ட இந்த சங்கங்களைத் தவிர பதிவு செய்யப்படாத சங்கங்களின் எண்ணிக்கை

www.tamilarangam.net



562-ஆகவும் அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை 3 99 159-ஆகவும் உயர்ந்தன. பதிவு செய்யப்பட்ட சங்கங்களும் ஏராளமாக இருந்தன. இதோடு கூடவே தொழிற்சங்கங்களின் நிதி நிலைமையும் சிறப்பாக இருந்தது. 1936-37-ல் சங்கங்கள் கணக்கு வழக்கின்படி அவைகளின் மொத்த வருவாய் 4 88 431-ரூபாயாகும் 1937-38-ல் இது 6 93 444 ரூபாயாக உயர்ந்தது.

ஏ.ஐ.டி.யு.சி-யின் 16-ஆவது மாநாடு சிப்நாத் பானர்ஜியின் தலைமையில் 1938 ஜனவரி 1, 2-தேதிகளில் நடைபெற்றது. இந்த மாநாடு நடைபெறும்போது ஏ.ஐ.டி.யு.சி-யின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 1 22 050-ஆக இருந்தது. இந்த அமைப்புடன் இணைக்கப் பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 98-ஆகும்.

தொழிற்சங்க ஒற்றுமையை ஊட்டி வளர்க்கும் விஷயத்தில் இந்த மாநாடு முக்கியமான பங்காற்றியது. இரண்டு அமைப்புகளுக் கிடையிலும் ஒற்றுமையை வளர்த்தெடுப்பதற்கும் நேஷனல் டிரேட் யூனியன் பெடரேஷனுடன் கலந்து பேசுவதற்கும் மாநாடு ஒரு துணைக்குழுவைத் தேர்ந்தெடுத்தது. "கிரியின் கருத்துக்கள்" என்ற பெயரில் நேஷனல் டிரேட் யூனியன் பெடரேஷன் முன் வைத்த ஒற்றுமைக் கருத்துக்களை சில திருத்தங்களுடன் ஒற்றுமைப் பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்த மாநாடு அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி 1938-மார்ச் 6-ஆம் நாள் கண்டன நாளாகக் கடைப்பிடிக்க முடிவு செய்தது. 1934-ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கக்கோரி 1938-மார்ச் 10-ஆம் நாள் ஓர் 'அகில இந்திய கோரிக்கை நாள்' ஆகக் கொண்டாடவும் மாநாடு முடிவெடுத்தது.

1938ஏப்ரல் முதல் தேதியன்று ஏ.ஐ.டி.யு.சி-யினுடையவும் நேஷனல் டிரேட் யூனியன் பெடரேஷனுடையவும் (என்.டி.யு.எஃப்) கூட்டான கலந்தாலோசனை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் சுரேஷ் சந்திர பானர்ஜி தலைமை வகித்தார். கடுமையான விவாதங்களுக்குப் பிறகு ஒற்றுமைக் கோரிக்கை அங்கீகரிக்கப் பட்டது. என்.டி.யு.எஃப்-ஐ ஒரு கிளை என்ற அளவில் ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைப்பது, என்.டி.யு.எஃப்-இன் சட்டதிட்டத்தை ஏ.ஐ.டி.யு.சி-அங்கீகரிப்பது, ஏ.ஐ.டி.யு.சி-யில் என்.டி.யு.எஃப்-இன் இணைப்பை ஒராண்டாக நிர்மாணிப்பது ஏ.ஐ.டி.யு.சி. எந்த சர்வதேச அமைப்புடனும் இணைக்கப்படாத நிலையிலேயே அதில் இணைந்த கிளை அமைப்புகளுக்கு சொந்த முறையில் அவ்வாறு செய்யும் உரிமை அளித்தல், அனைத்து அரசியல் பிரச்சனைகளும் வேலை நிறுத்தப் பிரச்சனைகளும் பொதுக்குழுவினுடையதோ

www.tamilarangam.net



செயற்குழுவினுடையதோ நான்கில் மூன்று பெரும்பான்மையுடன் மட்டும் முடிவெடுப்பது, செயற்குழுவினுடையதோ பொதுக்குழுவினுடையதோ தீர்மானங்களையும், முடிவுகளையும் டி.யு.சி-யின் கொள்கையாக ஏற்றுக்கொள்வது, ஏ.ஐ.டி.யு.சி-யின் அதிகாரப்பூர்வக் கொடி 'டி.யு.சி' என்று எழுதப்பட்ட சாதாரணமான செங்கொடியாகக் கொள்வது, போன்ற ஆலோசனைகளை ஒற்றுமையைப் புனரமைப்பதற்காக இந்த மாநாடு ஏற்றுக்கொண்டது. ஒவ்வொரு பிரிவில் இருந்தும் 44 பேர் வீதம் உட்படுத்தி 88 உறுப்பினர்களைக் கொண்ட பொதுக்குழுவை மாநாடு தேர்ந்தெடுத்தது. 1 51 336 உறுப்பினர்களும் 63 சங்கங்களும் உள்ளிட்ட என்.டி.யு.எஃப், ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைக்கப்பட்ட பிறகு ஏ.ஐ.டி.யு.சி-யுடன் இணைக்கப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 188-ஆகவும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 3 66 454 ஆகவும் உயர்ந்தது. சுரேஷ் சந்திர பானர்ஜி தலைவராகவும் ஆர்.ஆர். பாகலா செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இவ்வாறு இந்த இரண்டு அமைப்புகளும் இணைந்தபோதிலும் இரண்டும் தனது தனது வெளிப்படையான தனித்தன்மைகளை நிலைநாட்டின. இருப்பினும் 1940-ஆனவுடன் பரஸ்பரம் கலந்து விட்டது ஒரு உண்மையாகிவிட்டது. இந்த இணைப்பின் வாயிலாக ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைந்த சங்கங்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்தது மட்டுமின்றி தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார அரசியல் சூறைக்காற்றுகளுக்கு மத்தியிலும் ஆடியசையாது உறுதியாக நின்று சொந்தக் கடமையாற்றும் வல்லமை மிக்க அமைப்பாக அது உருவாயிற்று.

❖❖❖

www.tamilarangam.net

## 7. இரண்டாம் உலகப் பெரும்போரின்போது தொழிற்சங்க இயக்கமும்.

**1939**-செப்டம்பரில் இரண்டாம் உலகப்பெரும் போர் வெடித்தது. காலனிகளை புனர்ப் பிரிவினை செய்ய ஏகாதிபத்திய நாடுகள் தங்களுக்குள் போட்டியிட்டன. அந்தப் போட்டி அதன் உச்சகட்டத்தை அடைந்த போது இரண்டாம் உலகப் பெரும்போர் வெடித்துக் கிளம்பியது. ஆனால் அந்தப் போரில் தொழிலாளி வர்க்கத்தின் எத்தகைய பங்கேற்பும் தேவைப்படவில்லை. இந்தியத் தொழிலாளி வர்க்கம் அதை நன்கு புரிந்து கொண்டிருந்தது. அவர்கள் போருக்கு எதிராக களத்தில் குதித்தனர்.

முதலில் பம்பாய் தொழிலாளிகள்தான் களத்தில் குதித்தனர். 1939-அக்டோபர் 2-ஆம் நாள் பம்பாய் நகரத்தின் 9 000 தொழிலாளிகள். வேலை நிறுத்தம் செய்தனர். கல்கத்தா சென்னை போன்ற நகரங்களில் போர் எதிர்ப்பு வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடை பெற்றன. இயல்பாகவே அரசு நாடு தழுவியவாறு தொழிலாளர்த் தலைவர்களை வேட்டையாடியது. இந்தக் கட்டத்தில் நாட்டின் தேசிய பூர்ஷ்வாத் தலைமை அரசுடன் உடன்படிக்கைக்கு முயற்சி செய்தது.

போர் மூலம் பொருட்களின் விலைகள் உயர்ந்தன. மக்களின் வாழ்க்கைச் செலவும் விஷம்போல் ஏறின. எனவே வாழ்க்கையைத் தள்ளிச்செல்ல தொழிலாளிகள் மிகவும் பிரயாசைப்பட்டனர். அதே பொழுது வேலை நேரத்தை அதிகப்படுத்தவும் வேலையில் வேகத்தைக் கூட்டவும் அரசு நடவடிக்கை எடுத்தது. போதாக் குறைக்கு ஏராளமான போர்க்கால அவசர நடவடிக்கைகளையும் அவர்கள் தொழிலாளிகளின் மீது திணித்தனர்.

இவையெல்லாம் தொழிலாளிகளால் சகித்துக்கொள்வதற்கு இயலாத அளவுக்கு அதிகமாக இருந்தன. விலை உயர்வை எதிர்க்கொள்ளவும் ஊதியத்தையும் பஞ்சப்படியையும் உயர்த்திப் பெறுவதற்கும் போராட்டத்தைத் தவிர அவர்களுக்கு வேறு வழி தென்படவில்லை. நாடு தழுவிய முறையில் வேலை நிறுத்தங்கள் வெடித்துக்கிளம்பின. இந்த வேலை நிறுத்தங்களில் 1940-மார்ச் மாதம் பம்பாயில் நடைபெற்றது மிக முக்கியமான ஒன்றாகும். அங்குள்ள 1.75 லட்சம் துணிமில் தொழிலாளிகள் பங்கேற்ற இந்த வேலை நிறுத்தம் பஞ்சபடி என்ற கோரிக்கையை மக்களின் சிரத்தைக்கு

www.tamilarangam.net



கொண்டுவந்தது. கான்பூரில் 3 00 00 தொழிலாளிகள் 10 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். 1940-ல் வங்கத்தில் சணல் ஆலைகளிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. கூலியில் 10 சதவிகிதம் உயர்வை வென்றெடுப்பதில் தொழிலாளிகள் சாதனை புரிந்தனர். 1939-ல் திக்போவில் அசாம் எண்ணெய்க் கம்பெனித் தொழிலாளிகள் 8மாதங்கள் நீடித்த சிரத்தைக்குரிய ஒரு நீண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டனர். 1940-ல் டாடா நகர் தொழிலாளிகள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே ஏ.ஐ.சி.யு.சி-யின் 18-ஆவது மாநாடு 1940 செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் கூடியது. 159-பிரதிநிதிகள் பங்கேற்றனர். மாநாட்டிற்கு அடுத்த நாள் நடைபெற்ற பொதுக்குழுவில் என்.டி.யு-எஃப்-பும் ஏ.ஐ.டி.யு.சி-யும் ஒன்றுபட முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவுக்குப் பிறகு என்.டி.யு.எஃப்-பில் இணைக்கப்பட்ட எல்லா சங்கங்களும் ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைக்கப்பட்டதாகக் கணக்கிடப்பட்டது. என்.டி.யு.எஃபின் அனைத்து கடன் பொறுப்புக்களும் உரிமைகளும் ஏ.ஐ.டி.யு.சி-யிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு ஒற்றுமை புனரமைக்கப்பட்ட பிறகு ஏ.ஐ.டி.யு.சியில் இணைந்த தொழிற்சங்கங் களின் எண்ணிக்கை 195-ஆகவும், அவைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 3 74 256 ஆகவும் உயர்ந்தன.

இந்தக் கணம் வரை ஏ.ஐ.டி.யு.சி–க்கு போரைக் குறித்த தெளிவான பார்வை எதுவும் இருக்கவில்லை. அந்தப் பார்வையை உருவாக்கு வதற்காக விவாதம் இயல்பாகவே மாநாட்டில் நடைபெற்றது. வெவ்வேறான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. "இந்தியாவின் விடுதலையையும் ஜனநாயகத்தையும் நிறுவமுடியாத ஒரு போர் இந்தியாவுக்கு நன்மை செய்யாது" என்று வி.வி. கிரி முன்வைத்த கட்டுரை கருத்து வெளியிட்டது. அப்பொழுது அஃப்தப் அலியும், வி.பி.கார்ணிக்கும் போருக்கு உளப்பூர்வமான ஒத்துழைப்பளிக்க வேண்டும் என கோரினர். நெடிய வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு கிரியின் தீர்மானம் நிறைவேறியது. வி.ஆர்.காளப்பாவையும் என்.எம்.ஜோஷியையும் அடுத்த ஆண்டுக்கு தலைவராகவும் செயலாளராகவும் தேர்ந்தெடுத்தனர்.

விரையிலேயே 1941-ஜூன் மாதம் ஃபாசிஸ்டுகள் சோவியத் யூனியனைத் தாக்கினர். அதோடு போரின் தன்மையே அடியோடு மாறிவிட்டது. இந்தப் புதிய சூழ்நிலையில் 1941-ஜூலை 6-ஆம் நாள், ஏ.ஐ.டி.யு.சி-யின் பொதுக்குழு நாக்பூரில் கூடி போர் தொடர்பான பிரச்சனைகளை மீண்டும் விவாதித்தது. நாஜிகளின் அத்துமீறிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆக்கிரமிப்புத் தாக்குதல்களுக்கு எதிராக சோவியத் யூனியனிடம் பரிவு காட்டப்படினும் இந்த விஷயத்தில் பயனளிக்கும் செயற்பாடு களுக்கான ஆலோசனைகள் எதையும் கூறவில்லை.

இந்த சூழ்நிலையில் சிலர் ஏ.ஐ.டி.யு.சி-யில் இருந்து விலகி வெளியேறினார்கள். அமைப்பின் பம்பாய் மாநாட்டில் போரை எவ்வாறு அணுகவேண்டுமென்பதில் கருத்து மாறுபாடு எழுந்ததைக் குறிப்பிட்டோமல்லவா, மாநாடு நிறைவேற்றிய வி.வி.கிரியின் தீர்மானத்தின்மீது கருத்து மாறுபாடு கொண்டதால் கல்கத்தாவின் கப்பல் தொழிலாளர் சங்கம் ஏ.ஐ.டி.யு.சி-யுடன் உறவைத் துண்டித்துக் கொண்டது. 1941-இறுதியில் எம்.என்.ராய், வி.பி. கார்னிக், மணிபென்காரா ஆகியோர் ஏ.ஐ.டி.யு.சி-யில் இருந்து விலகினர். "இந்தியன் ஃபெடரேஷன் ஆஃப் லேபர்" என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தினர். ஏ.ஐ.டி.யு.சி-க்கு எதிராகவும், போருக்கு முழு ஒத்துழைப்பளித்தும் அவர்கள் மாற்றுச்சங்கங்களை அமைக்கத் துவங்கினர். அவர்கள் அரசுதவி பெற்றதில் வியப்பில்லை. அதை அவர்களே ஒப்புக்கொண்டனர்.

1942-பிப்ரவரியில் கான்பூரில் கூடிய ஏ.ஐ.டி.யு.சி-யின் மாநாட்டிலும் போர் அணுகுமுறை தொடர்பாகத்தான் முக்கிய விவாதம் நடைபெற்றது. இதற்குள் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய போர் அணுகுமுறையை மாற்றிக் கொண்டனர். சோவியத் யூனியன்மீது ஃபாசிஸ்டுகள் போரைக் கட்டவிழ்த்துவிட்டதும் போர் மக்கள் போராகிவிட்டதாக அவர்கள் கூறினர். எப்படியென்றால், ஃபாசிசத்தின் தோல்வி இந்தியா உள்ளிட்ட காலனி நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு வலுவூட்டும். இந்தக் கருத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஏ.ஐ.டி.யு.சி-யில் ஏராளமாக இருந்தனர். மாநாட்டில் கொண்டுவரப்பட்ட இரண்டு தீர்மானங்கள் அதைத் தெளிவுபடுத்தின. கம்யூனிஸ்டுகளுக்காக பங்கிம் முகர்ஜி முன்மொழிந்த தீர்மானத்தை மிருணாள் காந்தி போஸின் தீர்மானம் எதிர்த்தது. பங்கிம் முகர்ஜியின் தீர்மானம் நேசசக்திகளின் போர் முயற்சிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வற்புறுத்தியது. மிருணாள் காந்தி போஸின் தீர்மானம் இந்தியத் தொழிலாளிகள் போர் முயற்சிகளை ஆதரிக்க வேண்டுமென்றால் ஆங்கிலேயர் களிடமிருந்து ஆட்சி அதிகாரம் கைமாறியாக வேண்டும் என்று கோரியது. இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான பெரும்பான்மை (நான்கில் மூன்று பெரும்பான்மை) கிடைக்க வில்லை. 1938-ல் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒற்றுமைத் தீர்மானத்தின் அடிப்படையில் அனைத்து அரசியல் மற்றும் வேலை நிறுத்தங்கள் தொடர்பான பிரச்சனைகளில் நான்கில் மூன்று

www.tamilarangam.net



பெரும்பான்மையுடன்தான் ஒப்புதல் அளிக்க வேண்டும். இதன் மூலம் போர் தொடர்பாக ஒரு தெளிவான முடிவை மேற்கொள்ள ஏ.ஐ.டி.யு.சி-யால் இயலவில்லை.

போர் முடியும்வரை இதே நிலைமைதான் தொடர்ந்தது. போர் முடியுந்தருவாயில் 1945-பிப்ரவரியில் ஓர் உலகத் தொழிற்சங்க மாநாடு லண்டனில் நடைபெற்றது. சமாதான வேண்டுகோள்களின்மீது தொழிற்சங்கங்கள் கடைபிடிக்க வேண்டிய கொள்கை, சமாதான மாநாடுகளில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதித்துவம், போருக்குப் பிந்திய புனர்நிர்மாணப்பணிகளில் தொழிலாளிகளின் அவசரத் தேவைகள், ஓர் உலகத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் உருவாக்கம் போன்ற விஷயங்களைப் பற்றி பேசுவதற்கும் முடிவெடுப்பதற்கும் தான் மாநாடு கூட்டப்பட்டது. ஏ.ஐ.டி.யு.சி-யைப் பிரதிநிதித்துவப் படுத்தி எஸ்.ஏ.டாங்கே தலைமையில் ஒரு பிரதிநிதிக் குழு மாநாட்டில் கலந்துகொண்டது. அதைத் தொடர்ந்து பாரிஸ் நகரில் அதே ஆண்டு செப்டம்பர்-அக்டோபரில் உலகத் தொழிற்சங்க காங்கிரஸின் மாநாடு நடைபெற்றது. அன்றிலிருந்து ஏ.ஐ.டி.யு.சி-டபிள்யு. எஃப். டி. யு -வில் ஒரு அங்கமாகத் தொடர்கிறது.

போர் வெடித்துக் கிளம்பிய பிறகு அது முடியும் தருவாய் வரையிலான கால அளவில் இந்தியத் தொழிற்சங்க இயக்கம் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு முன்னேறியது. 1926-ல் தொழிற்சங்கச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 1938-39-ல் 568ஆக இருந்தது. 1945-46-ல் அது 1087ஆக உயர்ந்தது. உறுப்பினர்களின் எண்ணிக்கை 3 99 159-லிருந்து 8 64 031-ஆக அதிகரித்தது. உறுப்பினர்கள் பெருக்கம் தொடர்பாக ஒரு பட்டியலைக் கிழேத் தருகிறோம்.

பதிவு செய்யப்பட்ட சங்கங்களும் அவைகளின் உறுப்பினர் எண்ணிக்கையும்

| ஆண்டு | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1937-38 | 420 | 390 112 |
| 1938-39 | 568 | 899 159 |
| 1939-40 | 667 | 511 138 |
| 1940-41 | 727 | 513 832 |
| 1941-42 | 724 | 573 540 |
| 1942-43 | 693 | 685 299 |
| 1943-44 | 761 | 780 967 |
| 1944-45 | 865 | 889 388 |
| 1945-46 | 1087 | 864 031 |

www.tamilarangam.net



அரசுக்கு வருடாந்திர திட்டங்கள் அனுப்பிய சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை மட்டும்தான் பட்டியலில் வெளியாகியிருக்கின்றன. திட்டங்களை அனுப்பாத ஏராளமான சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கை இந்தக் கணக்கில் வரவில்லை. அதாவது பதிவு செய்யப்பட்டதும் செய்யப்படாததுமான சங்கங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை, அதிகாரப்பூர்வ புள்ளி விவரக் கணக்குப் பட்டியலில் குறிப்பிட்டதைவிட எவ்வளவோ அதிகமாகும். இதையெல்லாம் தவிர ஏறத்தாழ அனைத்து தொழிற்சாலைகளிலும் இந்தக் காலகட்டத்தில் தொழிற்சங்கங்கள் பரவலாக உருவாயின.

இவ்வாறு ஏ.ஐ.டி.யு.சி-பலம் பெற்றதோடு, பல்வேறு தொழிற் சாலைகளிலும் புதிது புதிதாக தொழிற்சங்கங்கள் தோன்றிய போதிலும், காலனி அரசு தொழிலாளர் இயக்கத்தைப் பிளக்கும் அதனுடைய தந்திரத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது. இந்தியன் லேபர் ஃபெடரேஷனுக்கு அனைத்து உதவிகளையும் செய்து அதை அரசு தன்னுடைய சிறகுக்குள் வைத்து பாதுகாத்தது. அதன் இரண்டு பிரதிநிதிகள் ஃபிலாடெல்ஃபியாவில் கூடிய ஐ.எல்.ஓ. மாநாட்டிற்கு அனுப்பி வைத்தது. இருப்பினும் அந்த அமைப்பும் விரைவிலேயே பிளவுபட்டது. சிறிது காலத்தில் அந்த அமைப்பும் தொழிற்சங்க அரங்கிலிருந்தே துடைத்தகற்றப்பட்டது. இரண்டாம் உலகப் பெரும்போர் முடியும்போது ஏழு லட்சம் ஒன்றுபட்ட தொழிலாளிகளின் பக்கபலம் பெற்ற ஒரு அமைப்பாக ஏ.ஐ.டி.யு.சி. மட்டும்தான் எஞ்சியது.

❁❁❁

www.tamilarangam.net

# 8. போருக்குப் பிந்திய முன்னேற்றம்

இந்தியாவின் தொழிலாளி வர்க்க இயக்கம் போர்க்காலத்தில் பெருமளவு முன்னேறியது. சுகோமல் சென் மொழியில் கூறினால் ''மிகவும் ஒன்றுபட்டதும், வர்க்க உணர்வு பெற்றதும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக விட்டுக்கொடுக்காமல் போராடக் கூடியதுமான ஒரு அமைப்பாக அது வளர்ச்சியடைந்தது."

இந்த வளர்ச்சி போருக்குப் பிந்தி ஏற்பட்ட மக்கள் முன்னேற்றத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது. ஐ.என்.ஏ (நேதாஜியின் இந்திய தேசிய ராணுவம்) கைதிகளை விசாரணை செய்வதை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் தொழிலாளிகள் முக்கியப் பங்கேற்றனர். 1946-பிப்ரவரி 18-ஆம் நாள் ராயல் இந்தியன் நேவி (கப்பற்படை) ஆங்கில ஆட்சியை எதிர்த்து பகிரங்கமாகக் கலகத்தில் ஈடுபட்டது. பம்பாய்த் தொழிலாளிகள் கப்பற்படை யினருக்கு ஆதரவாகத் திரண்டனர். போலீசும் ராணுவமும் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தை துச்சமென மதித்து பம்பாய் தொழிலாளி வர்க்கம் ஒட்டுமொத்தமாக 1946-பிப்ரவரி 22-அன்று ஹர்த்தாலும் வேலை நிறுத்தமும் செய்தனர். கல்கத்தாவிலும் சென்னையிலும் கராச்சியிலும் கப்பற்படையினரின் போராட்டத் திற்கு ஆதரவாக தொழிலாளர்கள் ஏனைய பிரிவினருடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இவ்வாறு போருக்குப் பிந்திய முன்னேற்றங்களின் முன்னணி இடங்களை தொழிலாளி வர்க்கம் பிடித்துக் கொண்டது.

இதைத் தவிர போருக்குப் பிந்தி ஏற்பட்ட கடுமையான பொருளாதாரப் போராட்டங்களிலும் தொழிலாளி வர்க்கம் ஈடுபட வேண்டியதாயிற்று. பெரும்பாலும் வேலை நீக்கம் கூலி குறைப்பு போன்றவைகளை எதிர்த்துத்தான் போராட்டங்கள் நடைபெற்றன. வாழ்க்கைச் செலவு உயர்ந்ததற்கேற்ப பஞ்சப்படியை உயர்த்த வேண்டுமென்றும் தொழிலாளிகள் கோரிக்கை வைத்தனர். 1946-ல் நாடு தழுவிய வேலை நிறுத்தங்கள் அலையலையாக வெடித்துக் கிளம்பின. அதே ஆண்டு 19லட்சம் தொழிலாளிகள் பங்கேற்ற 1629-வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இந்த வேலை நிறுத்தங்களால் ஒரு கோடிக்கு மேல் வேலை நாட்கள் வீணாயின. வீரம் செறிந்த தொழிலாளி வர்க்கப் போராட்டங்களை அடக்கி ஒடுக்க அரசு கண்டபடி துப்பாக்கிச் சூடுகளையும் மேற்கொண்டன.

www.tamilarangam.net



போருக்குப் பிந்தி நடைபெற்ற தொழிலாளர் போராட்டங்களில் தபால்-தந்தித் துறை அதிகாரிகளுடையவும் தொழிலாளிகளுடையவும் போராட்டத்தைக் குறிப்பிட்டுச்சொல்லவேண்டும். இடதுசாரி அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் மட்டுமின்றி பல்வேறு மாணவர்- வெகுஜென அமைப்புகளும் வேலை நிறுத்தத்திற்கு தீவிர ஆதரவளித்தனர். வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர உடன்படிக்கைத் தீர்வு காணுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் வங்கச்சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கிடையில் 1947-பிப்ரவரி 13, 19-தேதிகளில் கல்கத்தாவில் ஏ.ஐ.டி.யு.சி-யின் 22-ஆவது மாநாடு நடைபெற்றது. ஏ.ஐ.டி.யு.சி-யின் அமைப்பு ரீதியான வளர்ச்சியை மாநாடு விளம்பரப்படுத்தியது. 7 96 194 உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி 1049 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர். அமைப்பில் இணைந்த சங்கங்களின் எண்ணிக்கை 601 ஆக உயர்ந்தது.

வாழ்க்கைக்குப் போதிய ஊதியம், சமூகப் பாதுகாப்புச் சட்டம் போன்ற தேவைகளின் அடிப்படையில் 1947-மார்ச் 18-ஆம் நாளை 'உரிமை நாளாகக்' கொண்டாட மாநாடு தொழிலாளி வர்க்கத்திற்கு அறைகூவல் விடுத்தது. உற்பத்திக் கருவிகள் பொதுவுடைமையில் இருக்கும், மனிதன் மனிதனைச் சுரண்டும் நடைமுறையை ஒழிக்கும் ஓர் ஆட்சி முறையை நிறுவுவதுதான் ஏ.ஐ.டி.யு.சி-யின் அடிப்படைக் குறிக்கோள் என்ற தீர்மானத்தை மாநாடு திரும்பவும் நிறைவேற்றியது.

தொழிலாளர் போராட்டசங்கங்களும் வெகுஜெனப் போராட்டங்களும் பலமடைந்து வருவது, காங்கிரஸ் தலைமைக்கு கிஞ்சித்தும் பிடிக்கவில்லை. இதற்குள் பல்வேறு மாநிலங்களில் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் அரசுகள் தொழிலாளர் போராட்டங்களை அடக்கி ஒடுக்கும் பிரிட்டீஷ் அரசின் கொள்கைகளையே கடைப்பிடித்தன. வர்க்கப் போரை நியாயப்படுத்தி, ஏ.ஐ.டி.யு.சி-மாநாட்டில் பேசிய நேருவுக்குக் கூட தொழிலாளிவர்க்கத்தின் சக்திவாய்ந்த முன்னேற்றத்தைச் சகித்துக்கொள்ள இயலவில்லை. அவர் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக அவதூறுகளைப் பொழியத் துவங்கினார். தொழிலாளி வர்க்கத்தின் எதிர்ப்பை முறியடிக்க அடக்குமுறையால் முடியாது என்பதை அரசு உணர ஆரம்பித்தது. எனவே ஒரு புதிய வழியைக் கடைபிடித்தனர். அதுதான் தொழிலாளி வர்க்கத்தை பிளவுபடுத்துதல் எனும் தந்திரமாகும். அதனடிப்படையில் காங்கிரஸ் தலைமையின் ஒரு பிரிவு இந்தியன் நேஷனல் டிரேட் யூனியன் காங்கிரஸ் (ஐ.என்.டி.யு.சி). இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்) என்ற அமைப்பை உருவாக்கியது. இந்த அமைப்பின் முதல் மாநாடு

www.tamilarangam.net



சர்தார் வல்லாபாய் படேல் தலைமையில் 1947-மே மாதம் டில்லியில் நடைபெற்றது. காங்கிரஸ்காரர்களின் தலைமையில் இருந்த சங்கங்களை ஏ.ஐ.டி.யு.சி-யில் இருந்து வேறுபடுத்தி ஐ.என்.டி.யு.சி-யில் இணைத்தனர். உண்மையில் மக்கள் விரோத பாரபட்ச நோக்குடன்தான் ஐ.என்.டி.யு.சி. உருவாக்கப்பட்டது. தலைமை உரையில் சர்தால் படேல் கூறினார்: "அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசை (ஏ.ஐ.டி.யு.சி) சீர்திருத்தி கைப்பற்ற நினைப்பதில் பொருளில்லை. ஏனென்றால் கம்யூனிஸ்டுகள் கள்ள உறுப்பினர்களின் கணக்கைக் காட்டி எதையும் செய்யத் துணிந்த வழியைப் பின்பற்றுபவர்களாவர். இன்றைக்கு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையை இதற்கு முன் எப்போதோ செய்திருக்கவேண்டும்." அன்றைய பம்பாய் தொழில் அமைச்சரும் பின்னாளில் இந்தியாவின் உள்துறை அமைச்சராகவுமிருந்த குல்சாரிலால் நந்தா கூறினார்: "கம்யூனிஸ்டுகளுடன் அடிப்படையிலே எதிர்ப்புடைய தொழிலாளிகளின் சிதறிக்கிடக்கும் அணிகளை ஒன்று சேர்ப்பதுதான் இந்த சந்தர்ப்பத்தில் அவசரமாகச் செய்ய வேண்டியதாகும்.

சர்தார் படேலும், குல்சாரிலால் நந்தாவும் போன்றவர்கள் எழுப்பிய இந்த அவதூறுகளை மறுத்து ஏ.ஐ.யு.சி-யின் அன்றைய பொதுச் செயலாளர் என்.எம். ஜோஷி பதிலளித்தார்: "புதிதாக உருவாக்கப்பட்ட இந்த ஐ.என்.டி.யு.சி. எனும் அமைப்பு காங்கிரஸ் கட்சியின் ஒரு வால் மட்டுமேயாகும். எந்த வகையிலும் அது ஏ.ஐ.டி.யு.சி-யில் இன்றைக்கு கம்யூனிஸ்டுகளுக்கு பெரும்பான்மையிருப்பது உண்மைதான். ஆனால் ஏ.ஐ.டி.யு.சி-மேற்கொண்ட முடிவுகளனைத்தும் ஏ.ஐ.டி.யு.சி-யின் ஒட்டுமொத்த முடிவுகளாகும். இன்றைய இடர்களுக்கெல்லாம் அனுதாபத்துடன் உடனடியாக நிவாரணம் காண்பதுதான் தீர்வாகும். மிரண்டு கிடக்கும் காங்கிரஸ் அமைச்சரவைகள் இடர்களைத் தீர்க்காமல் குறுக்கு வழியாக தொழிலாளி வர்க்கத்தை பிளவுபடுத்தலாம் என்று நினைக்கின்றன. அவர்கள் அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்வார்கள். ஆனால் அதனால் என்ன ஆயிற்று? ஆபத்து நெருங்கி வந்து விட்டதே..."

புதிய அமைப்பிற்கு காங்கிரசின் புகழ் என்ற பரிவட்டம் கிடைத்தது. மத்திய மாநில அரசுகளின் பக்கபலமும் கிடைத்தது. அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த தொழிலாளிகளின் உளப்பூர்வமான ஆதரவும் ஒத்துழைப்பும் பெறுவதில் ஐ.என்.டி.யு.சி. வெற்றி பெற்றதாகக் கூறமுடியாது. நாடு தழுவியவாறு நடைபெற்ற

www.tamilarangam.net



வெகுஜன முன்னேற்றமும் வேலை நிறுத்தங்களும் ஹர்த்தால்களும் அதற்கு எடுத்துக் காட்டுகளாகும். அதாவது தொழிலாளிகளை பிளவுபடுத்திய பிறகும் தேசியப் போராட்டத்தின் வீறுகொண்ட வேகத்தைக் குறைக்க முடியவில்லை என்று பொருள்!

அரசியல் அரங்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. போருக்குப் பிந்திய வரலாற்றுப் பாடத்தை பிரிட்டீஷ்காரர்கள் கற்றுக்கொண்டனர். பழையபடி ஆட்சி நடத்த முடியாது என்பதை அவர்கள் உணர்ந்தனர். தேசியப் போராட்டத்தின் தலைமை தங்களிடமிருந்து பறிபோய்விடும் என்று காங்கிரஸ்காரர் களும் அஞ்சினர். இந்தச் சூழ்நிலையில் பிரிட்டீஷ்காரர்களும் இந்திய முதலாளிகளின் பிரதிநிதிகளான இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர்களும் தங்களுக்குள் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன் அடிப்படையில் 1947-ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியாவுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. அடிப்படையான இந்த அரசியல் மாறுதல் இந்தியாவின் சமூக நிலைமைகளில் ஆழமான மாற்றங்களைத் தோற்றுவித்தன.

இங்கு ஒரு விஷயத்தை அழுத்திச் சொல்லவேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கு காங்கிரஸ் கட்சிதான் விடுதலை பெற்றுத் தந்தது; ஆம், காங்கிரஸ் மட்டுமே! என்று ஒரு பிரச்சாரம் இன்றைக்கும் அழுத்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விடுதலைப் போரில் அது முக்கியப் பாத்திரத்தை வகித்ததை யாரும் மறுக்கவில்லை. இருப்பினும் இந்தியாவின் விடுதலைப் போரில் தொழிலாளி வர்க்கத்தின் பங்கேற்பை குறைத்து புறக்கணித்துவிட முடியாது. தொழிலாளர் இயக்கம் விடுதலைப் போருடனேயே வளர்ந்து அதோடு கூடவே பக்குவமடையவும் செய்தது. விடுதலைப் போரின் ஒவ்வொரு கட்டத்திலும் அதை முன்னோக்கி வழிநடத்திச் செல்வதில் தொழிலாளர் இயக்கத்தின் பாராட்டுக்குரிய பங்கேற்பு இருந்தது.

இந்தியாவின் விடுதலை ஒரு புதிய அரசியல் சக்தியை அரியாசனத்தில் ஏற்றியது. அதுதான் முதலாளித்துவ- நிலப்பிரபுத்துவ வர்க்கம்! அவர்களுடைய பொருளாதார விருப்பங்களும் அரசியல் விருப்பங்களும் இயல்பாகவே தொழிலாளிவர்க்க நலன்களுக்கு நேர் எதிராக இருந்தன. சுரண்டல் அடிப்படை அமைப்பை வலுப்படுத்துவதுதான் முதலாளிகளுடையவும் நிலப்பிரபுக் களுடையவும் குறிக்கோள். சுரண்டலற்ற ஒரு அமைப்பைத்தான் தொழிலாளிவர்க்கம் உருவாக்க விரும்புகிறது. எனவே அந்த சுரண்டலற்ற சமுதாயத்தை நிறுவவும் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் போன்ற வழி முறைகளின் திசைக்கு வீறுகொண்ட தொழிலாளிவர்க்கம் திரும்பியது. இவர்களுடைய போராட்ட முறை

www.tamilarangam.net



கூடுதல் இடர்மிகுந்ததும் சிக்கல் நிறைந்ததாகவும் இருந்தது. ஏனென்றால் தொழிலாளி இயக்கத்தில் பிளவை ஏற்படுத்தி அதன் ஒரு பகுதியை தங்களுடன் உறுதியாக நிற்கவைப்பதில் இந்திய முதலாளி வர்க்கம் வெற்றி பெற்றிருக்கிறது.

விடுதலைக்குப் பிறகு மாறுபட்ட அரசியல் கட்சிகள் கூடுதல் முறைப்படுத்தப்பட்ட கொள்கைத் திட்டங்களுடன் இந்தியாவின் அரசியல் அரங்கில் அரங்கேற்றம் மேற்கொண்டன. அந்தக் கட்சிகள் ஒவ்வொன்றும் அரசியல் மற்றும் அமைப்பு ரீதியில் தனது தனித்துவங்களை உயர்த்திக்காட்ட முயற்சித்தன. இத்தகைய நிகழ்வில் தொழிற்சங்க இயக்கமும் புதிய பிரிவினைக்கும் மறு பிரிவினைகளுக்கும் உள்ளாகியது. ஒவ்வொரு பகுதியும் அது தொடர்பு கொண்டிருக்கும் அரசியல் கட்சியின் தத்தவார்த்த முறை மற்றும் அமைப்பு முறை செல்வாக்கின் கீழ் இருந்தது.

இவ்வாறு ஏ.ஐ.டி.யு.சி-யில் பணியாற்றிக் கொண்டிருந்த சோஷலிஸ்டுகள் 1948-மார்ச்சில் ஹிந்த் மஸ்தூர் பஞ்சாயத்தை உருவாக்கினர். விரைவிலேயே சோஷலிஸ்டுகளின் தலைமையில் இருக்கும் ஹிந்த் மஸ்தூர் பஞ்சாயத்தும் ராயிஸ்ட்களின் தலைமையில் இருக்கும் இந்தியன் லேபர் ஃபெடரேஷனும் 1948- டிசம்பர் 24 அன்று கல்கத்தாவில் ஒரு கூட்டு மாநாட்டைக் கூட்டி இரு அமைப்புகளும் ஒரே அமைப்பாக இணைய முடிவெடுத்தனர். இவ்வாறு ஹிந்த் மஸ்தூர் சபா என்ற அமைப்பு உருவாயிற்று. அசோக் மேத்தா அந்த அமைப்பின் முதல் பொதுச் செயலாளர் ஆனார். இந்தப் பிளவுக்குப் பிறகு ஐ. என். டி. யு. சி-யும் எச்.எம். எஸ்ஸும் (ஹிந்த் மஸ்தூர் சபா H.M.S) சுதந்திரத் தொழிற்சங்கங்களின் சர்வதேசக் கூட்டமைப்பில் (கான்ஃபெடரேஷன்) இணைக்கப்பட்டன.

❁❁❁

www.tamilarangam.net

## 9.புதிய அமைப்புகள் மீண்டும்

சோஷலிஸ்டுகளின் தலைமையிலான ஹிந்த் மஸ்தூர் பஞ்சாயத்தும் ராயிஸ்ட்களின் தலைமையிலான இந்தியன் லேபர் ஃபெடரேஷனும் 1948 டிசம்பர் 24-ஆம் நாள் கல்கத்தாவில் மாநாடு கூட்டி ஹிந்த் மஸ்தூர் சபாவை உருவாக்கினர் என்று கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டோமல்லவா? ஆனால் அந்த மாநாட்டில் பங்கேற்ற சிலரால் எச்.எம்.எஸ்-ஸின் கொள்கையுடன் ஒத்துப்போக முடியவில்லை, அவர்கள் 1948-டிசம்பர் மாதம் 27ஆம் நாள் கல்கத்தாவில் கூடி யுனைடெட் டிரேடு யூனியன் கமிட்டி என்ற பெயரில் இன்னொரு அமைப்பை தோற்றுவித்தனர். பிறகு ஒரு நான்காண்டுகளுக்குப் பிறகு 1952- ஏப்ரல் 30-ஆம் நாள் இந்த கமிட்டி ஒரு புதிய மாநாட்டை கல்கத்தாவில் கூட்டி யுனைட்டெட் டிரேடு யூனியன் காங்கிரஸ் என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பிற்கு ஆர்.எஸ்.பி.(ரெவல்யூஷ்னரி சோஷலிஸ்டு பார்டி-புரட்சி சோஷலிஸ்ட் கட்சி) தலைமையேற்றது. சிறிது காலத்திற் குள்ளேயே ஆர்.எஸ்.பி-யிலிருந்தும் சில உறுப்பினர்கள் பிரிந்து சென்றனர். அவர்கள் சோஷலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா (எஸ்.யு.சி.ஐ) என்ற பெயரில் ஒரு புதிய கட்சியை உருவாக்கினர். இதோடு புதிதாக உருவான தொழிற்சங்க மையமும் இரண்டாகப் பிளவுபட்டது. அன்றிலிருந்து யு.டி.யு.சி- என்ற ஒரே பெயரில் இரண்டு போட்டி அமைப்புகள் செயல்பட்டன. இவற்றில் ஒன்றை ஆர்.எஸ்.பி-யும் இன்னொன்றை எஸ்.யு.சி.ஐ-யும் வழி நடத்துகிறது.

எச்.எம்.எஸ்-க்கும் நீண்ட நாட்கள் ஒற்றுமையாக இருக்க முடியவில்லை. சோஷலிஸ்ட் கட்சிக்குள் உட்பூசல்கள் முற்றியபோது ஹிந்த் மஸ்தூர் பஞ்சாயத் மீண்டும் தோன்றியது. சோஷலிஸ்ட் கட்சியின் பிறிதொரு குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் எச்.எம்.எஸ்-ஸுக்கு போட்டியாக அது செயல்படத் துவங்கியது.

இருந்த டி.பி. தெங்ரடி என்பவராவார். ஹிந்துத்துவத்தின் பிற்போக்குத் தத்துவத்தில் ஊன்றிய ஜனசங்கத்தின் தொழிலாளர் பிரிவு என்ற முறையில் பி.எம்.ஸ (பாரதீய மஸ்தூர் சங்கம்) உருவாயிற்று. அதை இப்போது பாரதீய ஜனதா கட்சி (பி.ஜே.பி) வழி நடத்துகிறது.

இவ்வாறு தொழிற்சங்கங்கள் பிளவுபட்டு புதிய சங்கங்கள் தோன்றுவது அரசியல் கட்சிகள் மற்றும் அவைகளின் குழுக்களின்

www.tamilarangam.net



விருப்பத்திற்கேற்பத்தான் என்பது உண்மை. இந்தக் காரணத்தால் அவை ஒவ்வொன்றும் அந்தந்த அமைப்புகள் பிரதிநித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் குழுக்களின் போஷாக்கு அமைப்புகளாகத்தான் செயல்படுகின்றன. இதனால் இந்தியத் தொழிலாளி வர்க்கம் வெவ்வேறு அரசியல் கட்சிகளின் கோட்பாடுகள் மற்றும் செல்வாக்கிற்கு ஆட்பட்டிருக்கிறது. அதன் விளைவாக தொழிலாளி வர்க்க ஒற்றுமை குலைந்துவிட்டது.

இந்தியா விடுதலை பெற்றபோது நாடு தழுவியவாறு மக்கள் மெய்மறந்து மகிழ்ந்தனர். தேசிய அரசின் கீழ் நாடு எதிர்க்கொள்ளும் பிரச்சனைகளுக்கு விரைவில் பரிகாரம் கிடைத்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். தங்களுடைய வாழ்க்கை நிலவரம் சீரடையும் என்றும் அவர்கள் கணக்குப் போட்டனர். தங்களின்பால் அரசின் அணுகுமுறையிலும் மாறுதலிருக்கும் என்று அவர்கள் எண்ணினர்.

ஆனால் சங்கதிகள் நேர்மாறான திசைக்குத்தான் திரும்பியது. அவர்களுடைய கணிப்புகள் தவறாகி, பணவீக்கமும் விலையேற்றமும் பொருளாதார அமைப்பையே உலுக்கி, மக்கள் வாழ்க்கை வறுசட்டியிலிருந்து எரி நெருப்புக்குள் விழுந்த கதையாகிவிட்டது. புதிதாக ஆட்சியிலமர்ந்த அரசு; முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் சென்றதே இதற்குக் காரணமாகும். நிலப் பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களை துடைத்தகற்றாமல் அதனுடன் உடன்படிக்கை வேறு செய்து கொண்டனர்.

இயல்பாகவே தொழிலாளிகள் எதிர்ப்பு நிலைக்கு தள்ளப் பட்டனர். அவர்களுடைய வீறுமிக்க அமைப்பான ஏ.ஐ.டி.யு.சி-அதற்கு தலைமை ஏற்றது. எனவே ஏ.ஐ.டி.யு.சி-க்கும் அதனுடன் இணைக்கப்பட்ட தொழிற்சங்கங்களுக்கும் எதிராக காங்கிரஸ் அரசு பயங்கரமான அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டது. ஏ.ஐ.டி.யு.சி-யின் ஏராளமான அலுவலகங்கள் அரசால் பூட்டி சீல் வைக்கப்பட்டன. ஏ.ஐ.டி.யு.சி-தலைவர்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட சங்கங்களின் ஏராளமான தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். சிலர் தலைமறைவாகச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த பெரும் அடக்கு முறைத் தாக்குதலின் நோக்கம் ஏ.ஐ.டி.யு.சி-யை நொறுக்கி அழிப்பதாகும். 1948-50- காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி செய்ததைப் போல் ஏ.ஐ.டி.யு.சி-யும் சில இடதுசாரித் தீவிரப் போக்குத் தவறுகளைச் செய்ததுதான் அரசின் இந்த திடீர்த் தாக்குதலுக்குக் காரணமாக இருந்த போதிலும், இரண்டையும் அரசால் அடக்கியொடுக்கவோ அழிக்கவோ முடியவில்லை. ஏனென்றால் இரண்டுமே பொதுமக்களையும் தொழிலாளிகள்

www.tamilarangam.net



பாட்டாளிகளையும் விட்டுப் பிரியவில்லை என்பதுதான் காரணம். அவர்களுடைய ஆன்மார்த்த உணர்வும் தியாகப் பண்பும் மேற் குறிப்பிட்ட மக்கள் பிரிவுகளை ஈர்த்தது. ஏ.ஐ.டி.யு.சி-யை முற்றிலும் ஒரு போராட்ட அமைப்பாக தொழிலாளிகள் ஏற்றுக்கொண்டனர். ஆயினும் அடக்குமுறைக் காலத்தில் ஏ.ஐ.டி.யு.சி-யுடன் நெருங்க தொழிலாளிகள் தயங்கிய போதிலும் அந்த அமைப்பைத் தங்களுடைய நலன் காக்கும் அமைப்பாகவே அவர்கள் பார்த்தனர்.

இந்த அடக்கு முறையும் தொடர்ந்து ஏற்பட்ட பிளவுகளும் ஏ.ஐ.டி.யு.சி-யின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் அதற்கு இன்னொரு பலத்த அடியும் விழுந்தது. ஐ.எல்.ஒ.-விற்கு ஏ.ஐ.டி.யு.சி-யின் பிரதிநிதிக் குழுவைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சனையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் 1948-அக்டோபர் மாதம் என்.எம்.ஜோஷி பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை சட்டவிரோத அமைப்பாக அரசு கருதுவதால் அந்தக் கட்சி உறுப்பினரான ஒருவரின் பெயரை ஐ.எல்.ஒ-வுக்கு பரிந்துரைக்க ஜோஷி மறுத்து விட்டார். அதுதான் பதவி விலகலுக்கு காரணமாக அமைந்து விட்டது.

1949-இறுதியில் ஏ.ஐ.டி.யு.சி-யின் 23-ஆவது மாநாடு பம்பாயில் கூடியது. ஏறத்தாழ சட்ட விரோதமாக்கப்பட்ட சூழ்நிலையில் தான் மாநாடு கூட்டப்பட்டது. இந்த மாநாடு தமிழகத்தைச் சேர்ந்த சக்கரைச் செட்டியாரை தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

1948-முதல் 1950-வரை ஏ.ஐ.டி.யு.சி. சட்டவிரோதமாக இருப்பினும் தொழிலாளிகள் அடங்கி ஒடுங்கியிருக்கவில்லை. அவர்கள் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் மேற் கொண்டு அரசுக்கு சவால் விட்டனர். அவர்கள் மேற்கொண்ட போராட்டங்களின் சூட்டைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், போராட்டங்கள் மற்றும் அதன் விளைவாக இழக்கப்பட்ட வேலை நாட்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் போதும். அந்தப் பட்டியல் கீழே தரப்பட்டிருக்கிறது.

| ஆண்டு | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற தொழிலாளிகளின் எண்ணிக்கை | இழக்கப்பட்ட வேலைநாட்கள் |
|---|---|---|---|
| 1947 | 1181 | 18 40 784 | 165 62 666 |
| 1948 | 1259 | 10 59 120 | 78 37 173 |
| 1949 | 920 | 6 05 457 | 66 00 295 |
| 1950 | 814 | 7 19 883 | 1 28 06 704 |

www.tamilarangam.net



1949-ல்தான் வேலை நிறுத்தங்களிலும் அதில் பங்கேற்ற தொழிலாளிகளுடையவும் எண்ணிக்கையில் லேசான சரிவு ஏற்பட்டது. அடுத்த ஆண்டும் வேலை நிறுத்தத்தின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் இழக்கப்பட்ட வேலை நாட்களின் எண்ணிக்கை கூடுதலாகும். இதன் பொருள் வேலை நிறுத்தங்கள் பல கூடுதல் நாட்கள் நீடித்தன என்பதாகும்.

1949ல் 23-ஆவது மாநாடு நடைபெற்று ஐந்தாண்டுகளுக்குப் பிறகுதான் ஏ. ஐ. டி. யு. சி-யின் 24-ஆவது மாநாட்டைக் கூட்ட முடிந்தது. 1954-மே மாதம் 27, 30 தேதிகளில் கல்கத்தாவில் அந்த மாநாடு நடைபெறுவதற்கு முன் அதே நகரில் 1952-ல் ஒரு சிறப்பு மாநாடு நடைபெற்றதை நினைவிற்கொள்ள வேண்டும். முதல் பொதுத்தேர்தல் நடைபெறும்போதும் அதற்கு சற்று முன்னும் அரசியல் சூழ்நிலை சாதாரண நிலைமைக்கு வந்த பிறகுதான் அத்தகைய ஒரு மாநாட்டை நடத்துவதற்கான பின்னணி உருவாயிற்று. ஏ.ஐ.டி.யு.சி-யினுடையவும் அதனுடன் இணைந்த ஏனைய சங்கங்களுடையவும் நடவடிக்கைகளை பலப்படுத்த இந்த சிறப்பு மாநாடு பெருமளவு உதவிகரமாக இருந்தது.

கல்கத்தாவில் நடைபெற்ற 24-ஆவது மாநாட்டிலும் இது பிரதிபலித்தது. 830 பிரதிநிதிகளும் 69 சகோதரப் பிரதிநிதிகளும் மாநாட்டில் பங்கேற்றனர். சகோதரப் பிரதிநிதிகளில் ஐ.என்.டி.யு.சி, எச்.எம்.எஸ் போன்ற அமைப்புகளுடன் இணைந்த சுதந்திரக் கூட்டமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் உள்ளடங்குவர். மாநாட்டின் போது 655 940 உறுப்பினர்களைக் கொண்ட 937 சங்கங்கள் ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைக்கப்பட்டிருந்தன. மாநாடு அங்கீகரித்த ஒரு ஆவணத்தில் "பொதுவான பிரச்சனைகளும் பொதுவான அபிலாஷைகளும் உணர்வுகளும் காரணமாக இந்தியத் தொழிலாளிகள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள தொழிலாளிகள் என்ற அடிப்படையில் ஐக்கியமாக இருக்கலாம்" என்று தெளிவுபடுத்தியிருந்தது. தொழிலாளிகளின் நலன்களைப் பாதுகாக்க பொது நடவடிக்கைகளில் இணைந்து பணியாற்ற அனைத்துச் தொழிற்சங்க தலைவர்களையும், ஊழியர்கள் செயல்வீரர்களையும் ஆவணம் கேட்டுக்கொண்டது. வெவ்வேறு தொழில்களிலும் தென்படும் நிலைமை தொடர்பாக மாநாடு பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியது.

மாநாடு சக்கரைச் செட்டியாரைத் தலைவராகவும் எஸ்.ஏ.டாங்கேயை பொதுச்செயலாளராகவும் தேர்ந்தெடுத்தது.

www.tamilarangam.net

## 10. வர்க்க சமரசத்திற்கு எதிரான போராட்டம்

கல்கத்தா மாநாடு நடைபெறுவதற்குள் சர்வதேசிய மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்து முடிந்திருந்தன. அந்த மாறுதல்களின் அலை ஏ.ஐ.டி.யு.சி-க்குள்ளும் வீசியது. எனவே ஐம்பதுகளின் இரண்டாம் பகுதி மற்றும் அறுபதுகளின் தொழிற்சங்க வரலாற்றை விளக்கும்போது அந்த மாறுதல்கள் தொடர்பான பரிசோதனை தவிர்க்க முடியாததாகும்.

இந்தியா விடுதலையடைந்த தருவாயில் சர்வதேசிய மட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் மேலோங்கிய கை தொடர்ந்து கொண்டு தானிருந்தது. பொருளாதார அரங்கிலும் ராணுவ அரங்கிலும் அதனுடைய மேலாதிக்கம் நிலைத்துக் கொண்டிருந்தது. எனவே சர்வதேசிய அரங்கில் ஒட்டுமொத்தப் பிரச்சனைகளிலும் ஏகாதிபத்தி யத்தைச் சார்ந்து அதற்கு அனுகூலமான நிலைப்பாட்டை இந்திய அரசு மேற்கொண்டது. இந்தோ-சீனாவின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கப் பறந்து செல்லும் பிரெஞ்சு விமானங்களுக்கு எண்ணை நிரப்பும் தளமாக இந்தியாவைப் பயன்படுத்த அனுமதித்தது, மலேயாவின் தேசிய விடுதலைப் போராட்டத்தை குருதியில் மூழ்கடித்துக் கொல்ல இந்தியாவிலி ருந்து கூர்க்காக்களை 'ரிக்ரூட்' செய்தனுப்ப பிரிட்டீஷ்காரர்களுக்கு அனுமதியளித்தது, வடகொரியாவை குறிவைத்து தென்கொரிய போரை அவிழ்த்துவிட்டபோது வடகொரியாவை போர்க் குற்றவாளிகளாக அறிவிக்கும் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியப் பிரதிநிதி ஐ.நா. சபையில் கையைத் தூக்கியது ஆகியனவெல்லாம் இதற்கு உதாரணங்களாகும்.

ஆனால் 1952-வாக்கில் சர்வதேசிய அரங்கில் நிகழ்ந்த மாறுதல்களின் சுவடைப் பின்தொடர்ந்து இந்திய அரசும் அதன் நிலைப்பாட்டில் மாறுதலைச் செய்தது. அமெரிக்க ஏகாதிபத்தியம் நொறுங்கத் துவங்கியதும், பல்வேறு மண்டலங்களில் அதன் ஆதிக்கத்திற்கு சவால்விட்டு சோவியத் யூனியன் முன்னுக்கு வந்ததும், சோஷலிச அணி பலம் பெற்றதும், கொரியப் போரில் அமெரிக்கா தோல்வியுற்று பின்வாங்கியதும், போன்ற நிகழ்வுகள்தான் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள இந்திய அரசைத் தூண்டின. அதைத் தொடர்ந்து சோஷலிச அணிக்கு சாதகமான நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டபோது ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளின் முன் இந்தியாவின் அந்தஸ்து உயர்ந்தது. அந்த நாடுகள்

www.tamilarangam.net



இந்தியாவை உற்றுப் பார்க்கத் துவங்கின.

வெளிநாட்டுக் கொள்கையில் மட்டுமின்றி, உள்நாட்டுக் கொள்கையிலும் இந்திய அரசு மாறுதலைக் கொண்டு வந்தது. முதலாம் பொதுத்தேர்தல்தான் அதற்கு முக்கியக் காரணமாகும். அந்த தேர்தலில் காங்கிரசுக்கு ஆளுவதற்கான பெரும்பான்மை கிடைத்த போதிலும், பதிவான வாக்குகளில் பாதிகூடக் கிடைக்கவில்லை. அதுமட்டுமின்றி, 1948-51காலகட்டத்தின் அடக்குமுறையால் அழிந்து விட்டதாக முதலாளிவர்க்கம் கணக்குப் போட்ட கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்றத்தின் மிகப்பெரிய எதிர்க்கட்சிக் குழுவாக உருவாயிற்று. தேர்தல் முடிவின் வரலாற்று உண்மையை அவர்கள் கற்றுக்கொண்டனர். மக்களை சோஷலிசத் தத்துவம் பெருமளவில் ஈர்த்துக்கொண்டதை அவர்கள் புரிந்து கொண்டனர். தங்களுடைய கால்களின் கீழ் மண்சரிவேற்படுவதை அவர்கள் கண்டுகொண்டனர்.

இந்தச் சூழ்நிலையில் சோஷலிசத் தத்துவத்தால் ஈர்க்கப்பட்ட மக்களை தங்களுடைய கட்சியில் நிலை நிறுத்தவும், தங்களுடைய கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் திருப்பிக் கொண்டுவரவும், இடதுசாரி வேடம் பூண்டு கூத்தாடுவதென்று இந்திய தேசிய காங்கிரஸ் முடிவெடுத்தது. ஆவடியில் கூடிய அவர்களுடைய மாநாட்டில் "சோஷலிச மாதிரிச் சமூகம்" கட்டி எழுப்புவதுதான் தங்களுடைய குறிக்கோள் என்று அறிவித்தனர். அந்த அறிவிப்பு நடைமுறைப் படுத்தப்படும் என்று மக்களை நம்பச் செய்ய, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல்வடிவைத் தயாரிக்க சோஷலிச நாடுகளில் இருந்து பொருளாதார வல்லுனர்கள் வரவழைக்கப்பட்டனர். அந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்வளர்ச்சிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. அது முடிந்ததும் தொழிற்கொள்கையை அறிவித்தனர். அதில் பொதுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இடதுசாரி முகமூடியணிந்த காங்கிரசின் மேடை நடிப்பு கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயே ஒரு பிரிவினரை சபலம் கொள்ளச் செய்தது. இந்திய முதலாளித்துவம் ஏகபோக முதலாளிகள், ஏகபோகமற்ற முதாளிகள் என இரண்டாகப் பிளவுபட்டிருப்பதாகவும் ஏகபோகமற்ற முதலாளிகளுடன் சேர்ந்து ஏகபோக முதலாளிகளை எதிர்த்துப் போராடுவதுதான் கம்யூனிஸ்டுகளின் கடமை என்றும் சபலத்திற்கிரையானவர்கள் வாதாடினர். அப்பட்டமான இந்த வர்க்க சமரசப் போக்கிற்கு எதிராக வர்க்கப்போர் வாதிகளும் திருப்பித் தாக்கினர். அதன் விளைவு இயல்பாகவே கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டிலிருந்த ஏ.ஐ.டி.யு.சி-யிலும் பிரதிபலித்தது. 1957-ல் எர்ணாகுளத்தில் நடைபெற்ற ஏ.ஐ.டி.யு.சி-யின் வெள்ளிவிழா

www.tamilarangam.net



மாநாட்டிலும் அது வெளிப்பட்டது.

எர்ணாகுளம் மாநாடு எல்லா வகையிலும் மிகச் சிறப்பாகவும் கம்பீரமாகவும் இருந்தது. 9 47 239 உறுப்பினர்களின் சார்பில் 1282 பேர் பிரதிநிதிகளாகப் பங்கேற்றனர். இவர்களில் 31பேர் பெண்களாவர். உலகத் தொழிற்சங்கப் ஃபெடரேஷன், சோவியத் யூனியன் தொழிற்சங்கங்களின் மத்தியப் பேரவை போன்ற அமைப்புகளின் சகோதரப் பிரதிநிதிகளும், பங்கேற்றிருந்தனர்.

பொதுச் செயலாளர் எஸ்.ஏ.டாங்கே அறிக்கை வாசித்தார். அறிக்கையில் நாட்டின் தொழில்மயமாக்கத்தையும், இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டத்தையும், தொடர்புபடுத்தி கொள்கை விளக்கம் அளிக்கப்பட்டதுடன், உழைக்கும் மக்களின் தேவைகளுக்கு முற்றான வடிவமும் தரப்பட்டது. ஓர் இருமுகக் கொள்கை என்று இது சிறப்பிக்கப்பட்டது. பொருளாதார அமைப்பின் வளர்ச்சியில் அரசுடன் ஒத்துழைப்பு, அந்தப் பொருளாதார அமைப்பில் தொழிலாளிவர்க்கத்தின் நலப்பாதுகாப்பு, ஆகிய பார்வையுடன்தான் அந்தக் கொள்கை முன்வைக்கப்பட்டது. பொதுச் செயலாளரின் அறிக்கையில் ஓர் 17 அம்சத் திட்டம் உருவமைக்கப்பட்டிருந்தது. "தேசியப் பொருளாதார அமைப்பின் வளர்ச்சியும், தேசிய நலத்திட்டங்களின் அடிப்படைச் சிறப்புக்களின் முழுமையாக்கமும்" இதில் ஒரு அம்சமாகும்.

எஸ்.எஸ். மிராஜ்கர் தலைவராகவும் எஸ்.ஏ.டாங்கே பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வெள்ளிவிழா மாநாட்டில் ஏ.ஐ.டி.யு.சி-யின் கொள்கைச் சருக்கல் தெரிவாக வெளிப்பட்டது. டாங்கே உருவாக்கிய இருமுகக் கொள்கை ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்றும் முதலாளிவர்க்கத்துடனான ஒத்துழைப்பை முழுமையாக வெளிச்சம் போட்டு காட்டியது. நாளாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் நிகழ்ந்ததுபோல் ஏ.ஐ.டி.யு.சி-க்குள்ளும் இந்தக் கொள்கை அப்பட்டமாக உருப்பெறத் துவங்கியது.

இருமுகக் கொள்கைக்கு உருக்கொடுத்த ஏ.ஐ.டி.யு.சி தலைமை அதன் இயல்பான பரிணாமம் என்ற வகையில் முக்கூட்டு மாநாடுகள் மற்றும் கமிட்டிகளுடைய முக்கியத்தை அமிதமாகச் சித்தரித்தது. அரசு மேற்கொள்ளும் முக்கூட்டு மாநாடுகளிலும், உருவாக்கும் முக்கூட்டு போர்டுகளிலும் சபலம் கொள்ளச் செய்வது, தொழிலாளி வர்க்கத்தின் பெரும் வெற்றியாக அதைச் சித்தரிப்பது- போன்றவைதான் அவர்களுடைய குறிக்கோள். அரசின் உற்பத்தித் திறன் திட்டத்திற்கு தலைமை முழு ஒத்துழைப்பளிப்பதாக அறிவித்து தேசிய நலனைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதை ஏற்றுக்கொள்ளவும் செய்தது.

www.tamilarangam.net



தொழிலாளிகளுடைய வீரம் செறிந்த போராட்டங்களில் பங்கேற்பதற்கு அவர்கள் எதிராக இருந்தனர். ஓர்க்லோடு, ராஷணலை பிரச்சனைகளில் தொழிலாளிகளுக்கு விரோதமான ஒப்பந்தங்களில் கையெழுத்திட டாங்கேயிஸ்ட் தலைமை தயங்கவில்லை. ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் போது சங்கத்தின் நிர்வாகக் குழுவிடமோ, தொழிலாளிகளின் 'ஜெனரல் பாடி'யைக் கூட்டியோ அனுமதி வாங்காமல் முற்றிலும் 'அதிகாரவர்க்கப் பாணியிலான அணுகுமுறையைத்தான் அவர்கள் கையாண்டனர். இத்தகைய அணுகுமுறைகளைத் தொழிலாளிகள் எதிர்ப்பதோடு அந்த எதிர்ப்பு தங்களை நோக்கியும் திரும்பும் என்று அஞ்சிய அவர்கள் தொழிற்சங்கங்கள் பலவற்றிற்கு தேர்தல் நடத்தவும் மறுத்தனர். அதிகாரிகளுக்கு திருட்டு 'ரிட்டன்கள்' அனுப்பி ஜனநாயக நடைமுறை முழுதாகத் தடுக்கப்பட்டதை உணர்ந்த தொழிலாளிகள், அவர்களாகவே முன்னின்று தேர்தலை நடத்தியபோது ஆதிக்க மனப்பான்மை கொண்ட தலைமை அதை ஏற்க மறுத்தது. அத்தகைய சங்கங்களை அமைப்பிலிருந்து வெளியேற்றி தேர்தலில் தங்களை தொழிலாளிகள் தோற்கடித்தால், அவர்களுடைய சங்கங்களைப் பிளக்கவும் போட்டிச் சங்கங்களை உருவாக்கவும் தயங்கவில்லை. அத்தகைய போட்டி சங்கங்களை ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைக்கவும் செய்தனர். அதே பொழுது தாங்கள் விரும்பாத தங்களுடைய தலைமைய ஏற்காத நூற்றுக் கணக்கான சங்கங்களுக்கு டாஸ்கேயிஸ்டுகள் ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைப்பு அளிக்க வேயில்லை. அதன் விளைவாக வீறுகொண்ட போராட்ட வீரர்களும் வர்க்கப்பாசம் கொண்டவர்களுமான நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் ஏ.ஐ.டி.யு.சி-யில் வெளியே நிற்க வேண்டியதாயிற்று.

இந்தச் சிதில நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவரவும், தொழிற்சங்கங்களை ஒன்றுபடுத்தவும், வர்க்க உணர்வுமிக்க தொழிலாளிகளும் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல விரும்புபவர்களும் ஓயாது முயன்றபோதிலும், டாங்கேயிஸ்ட் தலைமை அந்த முயற்சிகளையெல்லாம் வீணாக்கியது. இதற்கெல்லாம் மேலாக அவர்கள் தங்கள் சங்கங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்திக்காட்டியதோடு, காகிதச் சங்சங்களுக்கு ஏ.ஐ.டி.யு.சி-யில் இணைப்பையும் தந்தனர். இதன் நோக்கமெல்லாம் அமைப்பை தங்களுடைய பிடிக்குள்ளேயே வைத்திருக்கவேண்டுமென்பதைத் தவிர வேறில்லை.

இவ்வாறு அமைப்பை தங்களுடைய கட்டுக்குள் நிறுத்த அனைத்து வகையான ஈனச்செயல்களையும் புரிந்த அவர்கள்,

www.tamilarangam.net



முக்கூட்டு கமிட்டிகளிலும், வேஜ்போர்டுகளிலும், நேஷனல் லேபர் கமிஷனின் ஸ்டடி ட்ரூப்களிலும் தங்களுடைய சொந்தக்காரர் களையே நியமித்தனர். இவ்வாறு நியமனம் பெற்றவர்கள் வேலை நிறுத்த உரிமையை மறுப்பது, தொழிலாளர் போராட்டங்களை குறைகூறுகூது, போன்ற செயல்களின் மூலம் முதலாளிகள் மற்றும் அரசாங்கத்தின் பக்கம் சேர்ந்துகொண்டனர். போனஸ் கமிஷனில் டாங்கேயின் பாத்திரம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். போனசை கணிசமாக வெட்டிக் குறைப்பதை ஆதரிக்க அந்த தொழிற்சங்கத் தலைவர்கள் சற்றும் கூச்சப்படவில்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் வர்க்க சமரசப் போக்கின் பாதையைப் பின் தொடர்ந்தவர்கள்தான், ஏ.ஐ.டி.யு.சி-க்குள்ளும் அந்தக் கொள்கையைத் திணிக்க முயற்சித்தனர். இறுதியில் அது கட்சி இரண்டாகப் பிளவுபடுவதில் போய் முடிந்தது. திருத்தல் வாதிகளுக்கு சவாலவடுததவாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்டு) உருவாயிற்று.

---

கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவு தொழிற்சங்க இயக்கத்தைப் பாதிக்கக் கூடாது என்று சி.பி.ஐ(எம்) உளப்பூர்வ மாகவே விரும்பியது. ஏ.ஐ.டி.யு.சி-க்குள்ளேயே உறுதியாக நிலைத்து நிற்கவேண்டுமென்று முடிவு செய்தது. தொழிற்சங்க இயக்கத்திற்குள் நிகழும் ஒவ்வொரு பிளவும் தொழிலாளிகளின் நலன்களுக்கு ஊறுவிளைவிக்கும் என்பதால்தான் கட்சி இந்த முடிவுக்கு வந்தது. இந்த நிலைப்பாடுடன் முன்னோக்கிச் செல்வதற்கு முட்டுக் கட்டைகள் போட்டு, ஏ.ஐ.டி.யு.சி-க்குள் பிளவு தவிர்க்க முடியாதது என்ற நிலையை உருவாக்க முயற்சித்தது டாங்கேயிஸ்ட் தலைமை.

❖❖❖

www.tamilarangam.net

## 11. சி.ஐ.டி.யு. -உருவாகியது

பிளவு தவிர்க்க முடியாதது என்ற நிலையை உருவாக்க முயற்சித்த டாங்கேயிஸ்ட் தலைமையின் விருப்பத்தை முறியடிக்க ஏ.ஐ.டி.யு.சி-க்குள் இருந்த சி.பி.ஐ.(எம்) தலைவர்கள் முடிந்த அளவு முயற்சித்த போதிலும் அதனால் பலனில்லை என்று பிறகு உணர்ந்து கொண்டனர். ஒரு புரட்சிகரத் தொழிற்சங்க இயக்கமாக ஏ.ஐ.டி.யு.சி-யை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று அவர்கள் ஏகமனதாக முடிவுக்கு வந்தனர். இந்தச் சூழ்நிலையில் தொழிலாளி வர்க்க ஒற்றுமையை நிலை நிறுத்தவும், வர்க்கப்போராட்டங்களைப் பாதுகாக்கவும், ஒரு புரட்சிகரமான தொழிற்சங்க அமைப்பை உருவாக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். இவ்வாறுதான் ஏ.ஐ.டி.யு.சி-யின் வர்க்க சமரசப் போக்கையும் நடவடிக்கைகளையும் எதிர்க்கும் ஜெனரல் கௌன்சில் மற்றும் மாநிலக் குழு உறுப்பினர்களின் சிறப்பு மாநாடு ஒன்றை (கன்வென்ஷன்) 1970-ஏப்ரல் 9, 10ம் நாட்களில் கோவாவில் கூட்டினர்.

அந்த மாநாடு "ஒற்றுமைக்கான பேராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், வர்க்கப் போராட்டத்தின் விட்டுக்கொடா கோட்பாடுகளுக்குப் பின்னால் ஒட்டுமொத்தத் தொழிலாளி வர்க்கத்தையும் அணிதிரட்டுவதற்கும், ஆளும் வர்க்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தை கட்டவிழ்த்து விடுவதற்கும் ஒரு புதிய அகில இந்திய தொழிற்சங்க மையத்தை உருவாக்க வேண்டும்" என்று முடிவு செய்தது.

அந்த முடிவுக்கேற்ப "விவாதிப்பதற்கும் அது தொடர்பான இறுதி முடிவுகளை மேற்கொள்ளவும் எதிர்காலத் திட்டங்களை உருவாக்கவும் ஏ.ஐ.டி.யு.சி-யில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்க சமரச சீரழிவுக் கொள்கைகளை எதிர்க்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் ஒரு மாநாட்டைக் கூட்டவும்" சிறப்பு மாநாடு திட்டங்களை வகுத்தது. மாநாட்டைக் கூட்டும் பொறுப்பை பி.பி.டி.யு.சி. (பம்பாய் மாநில தொழிற்சங்க காங்கிரஸ்) ஏற்றுக்கொண்டது. 1970- மே மாதம் 28, 30 தேதிகளில் மாநாடு கல்கத்தாவில் நடைபெற்றது. ஜோதிபாசு தலைவராகவும் மனோரஞ்சன் ராய் செயலாளராகவும் நின்றுஒரு வரவேற்புக் குழு மாநாட்டின் வெற்றிக்காகச் செயல்பட்டது.

ஒரு புதிய தொழிற்சங்க மையம் நிறுவ வேண்டிய வரலாற்று பூர்வமான தவிர்க்க முடியாமையை வரவேற்புரையில் ஜோதிபாசு சுட்டிக் காட்டினார். அவர் கூறினார்:

www.tamilarangam.net



"இந்தியாவின் வீரமிக்க தொழிலாளி வர்க்கத்தை ஒன்று படுத்துவதற்கான ஒரு அமைப்பு என்ற நிலையில் அத்தகைய ஒருமையம் தற்போது வரலாற்றுப் பூர்வமான ஒரு தேவையாகி விட்டது. நம்முடைய சாமான்யத் தோழர்களின் கடுமையான உழைப்பின் வாயிலாகவும், மகத்தான தியாகங்களின் வாயிலாகவும் நம்முடைய உதவியினால் கட்டியெழுப்பப்பட்ட, ஏ.ஐ.டி.யு.சி, முதலாளிவர்க்கத்திடம் சரணடையும் ஒரு சாதனமாக மாற்றப்பட்டு விட்டது. திடசித்தம் மிக்க வீறுகொண்ட போராட்டங்களுக்கு அது தடையாக இருக்கிறது. அதனுடைய தலைமையைக் கைப்பற்றி யிருக்கும் திரிபுவாதிகள் இத்தகைய ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள்."

இவ்வாறு புரட்சிகரத் தொழிற்சங்க அமைப்பின் அணிகலன்களை அவிழ்த்தெறிந்த ஏ.ஐ.டி.யு.சி-யிடமிருந்து விடைபெற்றுச் செல்ல நேரிட்டதன் காரணங்களை ஒவ்வொன்றாக எடுத்துரைத்த ஜோதிபாசு தன்னுடைய உரையை கீழ்வருமாறு நிறைவு செய்தார்.

"இந்தச் சூழ்நிலைதான் ஒரு உண்மையான புரடசகரத தொழிற்சங்க மையத்தின் தேவையைக் கட்டாயப்படுத்தியது. இந்த மையம் தொழிலாளி வர்க்கத்தை துடிப்புமிக்க பொருளாதாரப் போராட்டங்களுக்கு வழி நடத்துவதோடு அவர்களுக்கு அரசியல் விழிப்புணர்வும் எழுச்சியுமூட்டி, ஆட்சி அதிகாரத்திற்கான போராட்டத்திற்கு தயார்படுத்தி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் பேராட்டக்களத்திலும் அணிதிரளச் செய்யும்..."

கிருஷ்ணபதகோஷ் கொடியேற்றிய பிறகு மாநாடு துவங்கியது. மாநாட்டில் 804637 உறுப்பினர்களைக் கொண்ட 1759 சங்கங்களின் பிரதிநிதிகளாக 4624 பேர் பங்கேற்றனர். சகோதரத் தொழிற்சங்கங்கள் 116 பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன. பார்வையாளர்களாக 1134 பேர் வந்தனர். ஆக மொத்தம் 5514 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாடு சி.ஐ.டி.யு( இந்திய தொழிற்சங்க மையம்) என்ற பெயரில் ஒரு தொழிற்சங்க மத்திய அமைப்பை உருவாக்க முடிவெடுத்தது. அமைப்பின் தலைவராக பி.டி.ரணதிவேயும் பொதுச்செயலாளராக பி.ராமமூர்த்தியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1980-மே 31-ஆம் நாள் கல்கத்தா பிரிகேடு மைதானத்தில் நடைபெற்ற பொதுமாநாட்டுடன் மாநாடு முடிவுற்றது.

புதிய அமைப்பை உருவாக்க நேர்ந்த சூழ்நிலையை தன்னுடைய முடிவுரையில் பி.டி.ரணதிவே விளக்கினார். அதன் முக்கியப் பகுதிகள் பின்வருமாறு.

"புதிய ஒரு மத்திய அமைப்பைத் துவக்கவேண்டுமென்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெருவிருப்பத்தின் காரணமாக நாம் இதை மேற்கொள்ள வில்லை. மாறாக தொழிலாளி வர்க்க ஒற்றுமையை வளர்த்தெடுக்க இப்படி ஒரு அமைப்பின் தேவை ஏற்பட்டுவிட்டது. அந்த ஒற்றுமையை வளர்த்தெடுக்கும் பொறுப்பு டாங்கே குழுவிடம், ஏ.ஐ.டி.யு.சி-க்குள் இருக்கும் சீர்திருத்த வாதிக்குழுவிடம் சென்றுவிடக்கூடாது என்பதனால்தான், உயிர்த்துடிப்பு மிக்க தொழிற்சங்கங்களை தொழிலாளிகளே மேற்கொள்வது என்று முடிவாயிற்று அந்த முடிவிலிருந்து உயிர் பெற்றதுதான் இந்த அமைப்பு.

இந்த அமைப்பு உருவாகக் காரணமாக இருந்த தேசிய சர்வதேசிய சூழ்நிலையை விளக்கிய பிறகு இந்தியத் தொழிற்சங்க இயக்கத்தின் மகத்தான கடமைகளை அவர் சுட்டிக்காட்டினார். அந்தக் கடமைகள் என்னவென்று பார்ப்போமே..

"அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தொழிலாளி வர்க்கம் உணர்வு பூர்வமாகப் போராடாவிட்டால் சோஷலிசமும் சுரண்டலில் இருந்து விடுதலை பெறுவதும் வெறும் வார்த்தை ஜாலங்களாகத்தான் மிஞ்சும். அந்தக் குறிக்கோளை வென்றெடுப்பதற்கான முதல் நடவடிக்கை, இன்றைய முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ அரசை அகற்றி ஒரு மக்கள் ஜனநாயக அரசை ஆட்சியிலமர்த்துவதாகும். இப்போதிருக்கும் அரசை அகற்றுவதற்காக ஓய்வின்றி நிரந்தரமாகப் போராடுவதும், விவசாயிகளுடன் கூட்டணி சேர்ந்து ஜனநாயகப் பேராட்டங்களை ஒருங்கிணைக்க முன்னிற்பதும், அவைகளில் பங்கேற்பதும், விவசாயப் புரட்சிகளுக்குத் தேவையான போராட்டங்களுக்கு ஆதரவளிப்பதும், அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குலம் அங்குலமாகப் பேராடுவதும், இந்தக் குறிக்கோள்களை முன்னிலைப்படுத்தி ஒட்டுமொத்த ஜனநாயக சக்திகளின் ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதும்தான் இன்றைக்கு தொழிற்சங்க இயக்கத்தின் தவிர்க்க இயலாத கடமையாகும். அந்தக் கடமைகளை எந்த அளவுக்கு நிறைவேற்றுகிறோமோ, அந்த அளவுக்கு சுரண்டலுக்கு எதிரான பேராட்டப் பாதையும் தெளிவாகும்."

கால் நூற்றாண்டுக்கு முன் பி.டி.ரணதிவே சுட்டிக்காட்டிய கடமைகள், தொழிலாளி வர்க்கத்தையும் தொழிற்சங்க இயக்கத்தையும் பொறுத்தவரை இன்றைக்கும் உயிர்த்துடிப்பு மிக்கதாகவும் பொருட்செறிவு மிக்கதாகவும் இருக்கிறது.

www.tamilarangam.net

www.tamilarangam.net

www.tamilarangam.net

www.tamilarangam.net

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்